Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 05 வியாழக்கிழமை (21.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 214

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

### அரசு - விடுதலைப்புலிகளை

# நேரடிப் பேச்சில் ஈடுபடுமாறு நோர்வேத் தரப்பு யோசனை

## தேக்கநிலையை போக்கமுடியுமென சுட்டிக்காட்டு

(நமது நிருபர்)

தற்போது நிலவுகின்ற அச்சமான சூழ்நிலையைப் போக்குவதற்கும், சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கும் அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நேரடியாகச் சந்தித்துப் பேசவேண்டும். நேரடிச் சந்திப்பின்மூலம் இருதரப்பிடமும் நிலவுகின்ற பல்வேறு நெருக்கடி களுக்கு தீர்வுகாணமுடியு மென நோர்வேத் தரப்பு யோசனைகளை முன்வைத்துள்ளதாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது இவ் யோசனைகளை நோர்வேத் தரப்பு முன்வைத்ததாக அவர் கூறினார்.

நோர்வேத் தரப்பினருடனான சந்திப்பை அடுத்து அவர் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய (10ஆம் பக்கம் பார்க்க)

## கிராம சேவையாளர் சுட்டுக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கல்முனைப் பகுதியில் நேற்றிரவு 8.30 மணிக்கு கிராம சேவையாளர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியா நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த மாரிமுத்து பாஸ்கரன் (வயது 54) என்ற கிராமசேவையாளரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

சுனாமி நிவாரண உதவிகள் தொடர்பாக உரையாட வந்த இரண்டு நபர்கள் அவருடன் உரையாடிய பின்னர், கைத்துப்பாககியால் சுட்டுவிட்டு இருவரும் தப்பிச் சென்றுள்ளனர். (ச-8)

## இலங்கையில் இவ்வருட இறுதிக்குள் ஜனாதிபதித்தேர்தலை நடாத்த வேண்டும்

### சர்வதேச ஜனநாயகவாதிகள் சங்கம் தீர்மானம்

(வோஷிங்டன்)

இலங்கையில் இவ்வருடத்திற்குள் ஜனாதிபதித் தேர்தல் நடப்படவேண்டுமென சர்வதேச ஜனநாயகவாதிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் கவாட், தலைமையில் வோஷிங்டன் நகரில் கூடிய அச்சங்கத்தின் அரசியல் தலைவர்களின் ஒன்பதாவது மாநாட்டிலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூன்று நாட்டின் பிரதமர்கள் உட்பட 26 நாடுகளின் அரசியல் தலைவர்கள் இம் மாநாட்டில் கலந்துகொண்டனர். இத்தீர்

சர் ஜான் பீற்றர்சன், அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் தலைவர் ஹென்மெல்மன் உட்பட பலர் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆசிய பசுபிக் வலய ஜனநாயகவாதிகளின் சங்கத் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பது தொடர்பாக அவுஸ்ரேலியப் பிரதமர் தனது வாழ்த்தை தெரிவித்துள்ளனர். ரணில் அச்சங்கத்தின் தலைவரானவுடன், நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சனும், கிரேக்கப் பிரதமரும் உப தலைவர்களாக நியமிக்கப்படுவார்

## செய்தியாளர்களை சந்திக்க நோர்வே குழுவினர் மறுப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று கிளிநொச்சியில் சந்தித்த இலங்கைக்கான பதில் நோர்வேத்தூதுவர், போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுத்தலைவர் ஆகியோர் சந்திப்பிற்குப்பின்னர் இலங்கைக்கான ஊடகவியலாளர்களுக்கு கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கவில்லை.

இது ஊடகவியலாளர்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை அளித்தது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீடிக்குமா? நீடிக்காதா? யுத்தம் கிழக்கில் தொடங்குமா? யாழில்தொடங்குமா? என்று யூகங்கள் எழுந்திருக்கும் நிலையில் நடத்தப்பட்டுள்ள இன்றைய சந்திப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு கருத்துக்களைக் கூறாமல் அவர்கள் சென்றது நிலைமைகள் மிகவும் இறுக்கமடைந்துள்ளது என்பதை உறுதிப்படுத்துவதையே உணர முடிந்ததாக ஊடகவியலாளர்கள் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். (ச-4)

மாநாட்டில் கலந்துகொண்டனர். இத்தீர் மானத்துக்கு அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன். ஹவாட், நோர்வே வெளிவிவகார அமைச்

மரும் உப தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-8)

# பொதுக்கட்டமைப்பை எதிர்ப்போரின் மாநாடு

பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் சிங்கள பௌத்த அமைப்புகளை ஒன்றிணைக்கும் தேசியபிக்கு முன்னணியின் மாநாட்டு எதிர் வரும் 28 ஆம் திகதி மாலை 3 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. சந்திரிகா புலிகளுடன் இணைந்து கையொப்பம் இட்ட உடன்படிக்கையை தோல்வியடையச் செய்வதற்காக அனைத்து சக்திகளையும் ஒன்றுதிரட்டும் நோக்கிலேயே தேசிய பிக்கு முன்னணி இம்மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளதாக முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் பெங்கமுவே நாலத தேரர், அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, பேரியல் அஷ்ரப் மற்றும் ஜே.வி.பி. எம்.பி. விமல்வீரவன்ஸ ஆகியோர் விசேட உரையாற்ற உள்ளதாகவும் தம்பர அமிலதேரர் தெரிவித்தார். (ச)

# ஜயந்த தனபாலவுடன் ஹெக்லண்ட் நேற்று பேச்சு

(கொழும்பு)

அரச சமாதான செயலகப்பணிப்பாளர் ஜயந்த தனபாலவிற்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கும் இடையில் நேற்றுமாலை சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து ஏற்பட்ட நிலைமைகள் குறித்தும் போர் நிறுத்தத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலான நிலைமைகள் குறித்தும் அரசியல் துறைப் பொறுப்பாளார் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பின் விபரம் குறித்து ஆராயப்பட்டதாக தெரியவருகின்றது.

எனினும் இச்சந்திப்புக்கள் குறித்த மேலதிக விபரங்கள் தெரியவரவில்லை.

(ச-8)

# நெருக்கடி நிலைமைகளை தவிர்க்க ஆலோசகர்களுடன் ஜனாதிபதி பேச்சு

(கொழும்பு)

யுத்தம் மீண்டும் வெடிக்கலாம் என்ற அச்சமும், பதற்றமும் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் அரசு உடனடியாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆலோசகர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஹரீம் பீரிஸ் உள்ளிட்டோரை அழைத்துப் பேச்சுநடத்திய ஜனாதிபதி குமாரதுங்க தற்போது நெருக்கடியான சூழ்நிலையில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கம், விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக்கான பாதுகாப்பு மற்றும் திருகோணமலை விவகாரங்கள் என்பன குறித்து ஆராயப்பட்டதாகவும், அது தொடர்பான அரசின் நிலைப்பாடு அனுசரணையாளர்கள் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதென்றும் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பின் சில விடயங்கள் தொடர்பில் நீதிமன்றம் இடைக்காலத் தடை வழங்கினாலும், அதில் 90 வீதமான விடயங்களை நடைமுறைப்படுத்தமுடியுமென்று அது கூறியிருக்கிறது.

எனவே அவற்றை அமுல்படுத்துவது குறித்து நாம் விடுதலைப் புலிகளுக்கு அனுசரணையாளர்கள் ஊடாக சில ஆலோசனைகளை வழங்கியிருக்கிறோம் என்றார்.

இதேவேளை நேற்றைய சந்திப்பில் அரசின் பதில் எதுவும் தமக்கு நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக அனுப்பப்படவில்லை யென அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உணவுக்காகச் செலவழிப்பதா? நகை நட்டுக்காகச் சேமிப்பதா?

## நினைவுப் பேருரையில் கலைப்பீடப் பேராசிரியர் கேள்வி

(தென்மராட்சி)

ஈழுத்தமிழர் கண்களை அகலத்திறந்து புலம்பெயர்ந்த நம் சகோதரருடன் செம்மையான பண்பாட்டு இடைத்தாக்கமொன்றை நடத்தினால் பல பண்பாட்டு விழுமியங்களை நாம் உள்வாங்கிக் கொள்வதுடன், உலகளாவிய பண்பாட்டு அடையாளமொன்றையும் உருவாக்கலாம். இது அரிய சந்தர்ப்பம. எல்லோரது செழிப்புக்கும் அவசியம். இதில் பத்திரிகை போன்ற ஊடகங்கள் செய்யக் கூடியது நிறைய உண்டு.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடப் பேராசிரியர் பொ.இரகுபதி தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையின் நினைவுப் பேருரையின் போது தெரிவித்தார்.

மகாஜனக் கல்லூரியின் அதிபர்.பி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நினைவுப் பேருரையின் போது "ஈழத் தமிழர் பண்பாட்டடையாளம்" எனும் தலைப்பில் பேராசிரியர் உரையாற்றினார்.

ஈழத்தமிழர், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டின் பாதுகாவலர் நாமே என்னும் பெருமையைச் சற்று மறக்கவேண்டும். இலங்கையின் பிற சமூகக்கட்டுமானங்களில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய விழுமியங்கள் ஏராளம். இந்த உலகளாவிய போக்கும் எங்களுக்குப் புதிதல்ல. சற்று மறந்திருக்கிறோம்.

புலம்பெயர்ந்தோர் செய்ய வேண்டிய பண்பாட்டுக் கடமையொன்று உண்டு. கலியாணம், சாமத்தியச் சடங்கு, பிறந்த நாள் கொண்டாட்டம், கோயில் திருவிழா - இனி போதும் அல்லது பிறகு பார்க்கலாம். தேவை - உணவு, சுகாதாரம், கல்வி, பாற்சமத்துவம், சூழற் பாதுகாப்புத் தொடர்பு சாதன வளர்ச்சி போன்றவையாகும்.

உணவாலும் சுகாதாரத்தாலும் மனப்பான்மையாலும் ஒரு மக்கட் கூட்டத்தின் உடலைமைப்பை ஒரு தலைமுறைக்குள்ளேயே மாற்றலாம். உலகப் போருக்கு முன் புள்ளவர்கள் எனப் பெயர் பெற்றிருந்த யப்பானியர் இன்று ஐரோப்பியருடன ஒப்பிடக் கூடிய அளவுக்கு உடலமைப்புடன் இருக்கிறார்கள். புலம் பெயர்ந்தோர் பிள்ளைகளின் வளர்ச்சியை உளளூரில் யுத்த காலத்தில் அகப்பட்டோர், அகதி முகாம்களில் இருப்போர் பிள்ளைகளுடன் ஒப்பிட்டால் உணவின் அருமை தெரியும். சரியான உணவு கிடைக்காமைக்கு வறுமையும் உணவுத்தட்டுப்பாடும் மாத்திரம் காரணம் அன்று. மனப்பான்மை என்பது இங்கு முக்கியமானது. உணவுக்காகச் செலவழிப்பதா? அல்லது நகை நட்டு சேகரிப்பதா? என்பதைத் தீர்மானிப்பது மனப்பான்மையாகும். அது பண்பாட்டால் வருவது.

பண்பாட்டு நிறுவனங்களுள் முக்கியமானது கல்வி நிறுவனங்கள். எழுத்தறிவித்தல் மாத்திரம் கல்வி அல்ல. சர்வதேச சமூகத்துடன் போட்டியிடவேண்டிய கல்வி எங்களுக்குத் தேவை. பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட எங்கள் கல்வி நிறுவனங்கள் மெல்லச் செத்துக்கொண்டிருக்கின்றன. எது கல்வி என்று தெரியாததால் வந்த வினை இது.

பிறந்த நாள், சாமத்தியச் சடங்குச் செலவுக்குப்பதிலாக கணனி வாங்கிக் கொடுங்கள். இணையத் தொடர்பைக் கொடுங்கள். ஆங்கிலம் மட்டுமல்ல, இன்னுமுள்ள உலக மொழிகளெல்லாம் கற்பிக்கப்படவேண்டும். அடுத்த தலைமுறையில் நெருங்கிய உறவினருடன் உரையாடுவதற்கே இந்த உலக மொழிகள் தேவைப்படும் நிலையில் இருக்கிறோம்.

இன்று பண்பாட்டுக் காரணங்களுக்காக இந்தியாவின் சர்வதேசப் பள்ளிகளுக்கு பிள்ளைகளை அனுப்புவது போல, புலம் பெயர்ந்த எமது பிள்ளைகள் இங்கு வந்து சர்வதேச கல்விகற்கும் நாள் வரவேண்டும். இன்றைய போர்ச்சூழல் இதற்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம். ஆனால் நாளை அந்நிலை வரக்கூடிய அடித்தளம் இப்பொழுதே இடப்பட வேண்டும்.

கல்விதனியார் மயப்பட்டு வருங் காலத்தில், அரசின் கற்கை நெறிகளுக்கு அப்பாலும் சிலவற்றைச் செய்யக்கூடிய சுதந்திரம் அரச கல்வி நிறுவனங்களுக்கு இன்று உண்டு. இதைப்பயன்படுத்தி, சில வசதிகளையும் இன்று யாழ்ப்பாணத்தில் கிடைக்காத ஆனால், தேவையான கற்கைநெறிகளையும் அறிமுகப்படுத்தினால் மகாஜனா அந்தக் காலத்தை விடச் சிறப்பாக வர வழியுண்டு என்று குறிப்பிட்டார். (து-16)

## சிறுவர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டு நிகழ்வு

அறவழிப் போராட்டக்குழுவும் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனமும் இணைந்து இன்று வியாழக் கிழமை வியாபாரி மூலையில், ஆழிப பேரலையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டு நிகழ்வினை நடாததவுள்ளன.

அறவழிப் போராட்டக்குழுவின் இயக்குநர் சீ.ஜீ. தங்கவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சுனாமி செயலணிக் குழுவின் பணிப்பாளர் க.பாலையா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் திருமதி. ஞானச்செல்வி சிங்கேஸ்வரன், பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இந் நிகழ்வில் பட்டம் பறக்க விடுதல், மாலை கட்டுதல், கோலம போடுதல், ஓவியம் வரைதல், சிறுவர் அனுபவம் பகிர்தல் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (க-16)

## வைத்தியசாலைகளை புனரமைக்க இந்தியா உதவி வழங்கவுள்ளது

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் உள்ள மூன்று வைத்தியசாலைகளைத் திருத்தியமைக்க இந்தியா உதவி வழங்க்வுள்ளது.

இது சம்பந்தமான உடன்படிக்கையில் இந்தியத்தூதுவர் நிருபமா ராவும், சுகாதார அமைச்சின் செயலாளர் ரஞ்சித் மலிகஸ்பேயும் அடுத்த வாரம் கைச்சாத்திடவுள்ளனர்.

திருகோணமலை, பருத்தித்துறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலைகளே இவ்வாறு திருத்தியமைக்கப்படவுள்ளன.

இந்த வைத்தியசாலைகளுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் இந்தியாவினால் வழங்கப்படவுள்ளன. இந்த மூன்று வைத்தியசாலைகளையும் திருத்தியமைப்பதற்கான திட்டத்திற்கென 17 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படவுள்ளது.

இந்த உதவி கடனாக வழங்கப்படமாட்டா்தென்பதால் இதனைத் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. அத்துடன் இந்த உதவிகள் ஆழிப்பேரலை நிவாரண சபையினூடாக அன்றி சுகாதார அமைச்சினூடாகவே வழங்கப்படும். (க-4)

## இராசி பலன்

**21.07.2005**
**(ஆடி 5, வியாழக்கிழமை)**
**பூரணை மாலை 5.37 வரை**
**உத்தராடம் பின்னிரவு 2.38 வரை**
**இராகுகாலம் 1.31-3.01 வரை**
**சுபநேரம் -7.31-9.01 வரை**
**பூரணை விரதம்**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், பெரியோரால் மதிக்கப்படுதல், போசன சுகம், நல்லதகவல். |
| இடபம் | ஆரோக்கியக் குறைவு, அதிக பிரயாசை, பிரயாணம், காரிய தாமதம். |
| மிதுனம் | பொருள் விரயம், சரீர வியாதி, முயற்சி தடங்கல், அபகீர்த்தி. |
| கடகம் | கலந்துரையாடல், காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம். |
| சிங்கம் | தொழில் விருத்தி, தேகநலன், மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம். |
| கன்னி | அஜீரணரோகம், கௌரவக்குறைவு, குடும்பக்கவ்லை, முயற்சி தாமதம். |
| துலாம் | தன்னம்பிக்கைக் குறைவு, தொழில் சிநதை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், சுபசெலவு. |
| விருச்சிகம் | நற்கீர்த்தி, சகோதரர் உதவி, தேகநலன், காரிய சித்தி. |
| தனுசு | மனோ சங்கடம், முயற்சி தாமதம், அதிக செலவு, ரோக நிலை. |
| மகரம் | புதிய முயற்சி, மாதர் நட்பு, பிறருக்கு உதவி செய்தல், சயன சுகம். |
| கும்பம் | சோம்பல் நிலை, தனவிரயம், பிரயாண அலைச்சல், சுபசெலவு. |
| மீனம் | நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், விருந்துபசாரம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## நோர்வே அனுசரணையாளர்களின் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு?

(கொழும்பு)

இலங்கையில் கடந்த சில வாரங்களாகத் தோன்றியுள்ள நெருக்கடி நிலைகளைத் தவிர்ப்பதற்காக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றசன் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்





ஹெல்கிஸன் ஆகியோர் இலங்கை வரவுள்ளதாக வெளியாகிய செய்திகளை நோர்வே தூதரக அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

புலிகளின் பாதுகாப்பான போக்குவரத்து, கிழக்கில் அதிகரித்து வரும் வன்முறை மறறும் பொதுக்கட்டமைப்பின் மீது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினால் எழுந்துள்ள சூழ்நிலைகள் மத்தியில் நோர்வேயில் இருந்து அனுசரணையாளர்கள் எவரும் உடனடியாக இலங்கை வரமாட்டார்கள் எனவும் தூதரக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதேநேரம் நோர்வே அனுசரணையாளர்கள் அடுத்தவாரமளவில் இலங்கை வருவார்கள் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே நோர்வே தூதரக அதிகாரிகள் இந்தத் தகவலைத்தெரிவித்தனர். (க)

## சிறுவர்களைப் பயன்படுத்தி திருடும் சம்பவங்கள் அதிகரிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வீடுகள் உடைத்துத் திருடும் சம்பவங்களில் பெருமளவு சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றமை தெரிய வந்துள்ளது.

இத்தகைய சம்பவங்களின் போது திருடர்கள் வீடுகளின் பின்பக்க யன்னல்களை அலவாங்குகளின் துணை கொண்டு உடைத்து, அதனூடாக சிறுவர்களை வீடுகளுக்குள் புகச் செய்து பொருட்களைத் திருடிவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வகையில் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள மட்டுவில் தெற்குப் பகுதியில் மட்டும் ஒருவார காலத்தில் நான்கு வீடுகளில் ஒரே மாதிரியான திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அதேபோன்று மட்டுவில் தெற்கிலுள்ள வங்கி ஊழியர் ஒருவரின் வீட்டில் பட்டப்பகலில் யன்னல் கம்பியை உடைத்து சிறுவன் உள்ளே அனுப்பப்பட்டுப் புதிய பண நோட்டுகளும் ஒருசோடி தோடும் களவாடப்பட்டுள்ளன.

அதேபோன்று மட்டுவில் தெற்கில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டிலும் மற்றும் இரு தொழிலாளர்கள் வீட்டிலும் இரவுவேளைகளில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருட்களை அபகரித்துச சென்றுள்ளனர். இத் திருட்டுச்சம்பவங்களின் காரணமாக மட்டுவில் தெற்குப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் அச்சம் நிலவிவருகின்றது. (க-16)

## மன்னாரில் கைப்பற்றப்பட்ட குண்டுகள் ஐரோப்பிய நாட்டுத் தயாரிப்புக்கள்

### குண்டு செயலிழக்கும் பிரிவினர் அறிக்கை

(மன்னார்)

மன்னாரில் கடந்த சனிக்கிழமை கைப்பறறப்பட்ட கிளைமோர் குண்டுகள் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டவை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிழக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த பண்டார பெத்தவலவின் பணிப்பிற்கமைய கைப்பற்றப்பட்ட கிளைமோர் குண்டுகளைக் கடந்ததிங்கட்கிழமை இராணுவத்தின் குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் பிரிவினர் வந்து பரிசோதனை செய்ததில் இவை ஐரோப்பிய நாட்டுத் தயாரிப்பு என்பதனை உறுதிப்படுத்தினர்.

கைப்பற்றப்பட்ட ஒரு குண்டிற்குள் 5 ஆயிரம் சைக்கிள் போல்கள் இருந்ததாகவும் இந்தக் குண்டு வெடித்தால் 800 சதுர அடி பரப்பிற்குச் சேதம் ஏற்படும் என்றும் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குண்டுகளை மன்னாருக்குக் கொண்டுவருமாறு உத்தரவிட்ட சந்தேக நபர் தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரைக் கைது செய்வதற்கு விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தக் கிளைமோர் குண்டுகளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச)

## சங்கீத பாட எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையினால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படுகின்ற சங்கீத பாடத்திற்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (ற-19)



சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மருதங்கேணி மீனவர்களுக்கு லண்டன் வாழ் நேசபாலம் அமைப்பினரால் உரும்பிராயைச் சேர்ந்த சுசீலாதேவி, பாராளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரின் உதவியுடன் 100 வலைகளும் கடற்றொழில் உபகரணங்களும் வழங்கப்பட்ட நிகழ்வின் போது எடுக்கப்பட்டபடம்.

## அடையாள அட்டை

(மருதங்கேணி)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்படடு அடையாள அட்டைகளை இழந்த ஆட்பதிவு திணைக்களத்தால் நடாத்தப்பட்ட நடமாடும சேவையின்போது ஆள் அடையாள அட்ட்டை பெற விண்ணப்பித்தவர்களின் ஒரு தொகுதி அடையாள அட்டை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அரசாங்க அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-35)

## யூலை 25ல் ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொதுக்கட்மைப்புக்கு எதிராக எதிாவரும் 25ஆம் திகதி ஜே.வி.பி. நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடாத்தவுள்ளது.

ஜே.வி.பி.பொதுக்கட்டமைப்பினை இரத்துச்செய்ய வேண்டுமெனக் கோரி தாக்கல்செய்திருந்த மனுவினை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமனறம், கடந்த வெள்ளிக்கிழமை அதன் சில சரத்துக்களுக்கு இடைகால தடையுத்தரவினை விதித்தது.

இந்நிலையிலேயே ஜே.வி.பி. நாடளாவிய ரீதியில் தமது போராடடத்தினை நடாத்தவுள்ளது. (இ-4)

# நூல் அறுந்த பட்டமாக ஜனாதிபதி... அழகாக விமர்சிக்கிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

**எதிர்கால எதிர்பாப்புக்களை மனதில் நிறுத்தியே ஜனாதிபதி பல அமைச்சுக்களை தம்வசம வைததிருப்பதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

**எது எவ்வாறாயினும் ஜனாதிபதி இன்று நோக்கங்கள் அற்ற ஒரு நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் விமல் வீரவன்ச கூறுகின்றார்.**

தேசிய ஒற்றுமைக்கான இயக்கம் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடாத்திய பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

ஜே.வி.பியின் 4 அமைச்சர்கள் விலகியதன் பின்னர் அந்த அமைச்சுக்கள் நான்கு, ஐந்தாக பிளவுபட்டுள்ளன.

கலசார அமைச்சு,விவசாய அமைசு போன்றவற்றுக்கு அமைச்சர்கள் இல்லை இவையிரண்டையும் ஜனாதிபதி தன்வசம் வைத்துக்கொள்ளுவாரென நினைக்கின்றேன். ஜனாதிபதி இந்த அமைச்சுக்களையெல்லாம வைத்துக்கொண்டு என்ன செயய்ப்போகிறார்?

கல்வியை தொடரும் அதேவேளை நாட்டுககு பாதுகாப்பை வழங்கிக் கொண்டு விவசாயத்தை மேற்கொண்டு அறுவடைசெய்து அதனை மற்றவர்களுக்கு ஊட்டி கலைமூலம அவர்களை மகிழ்விக்க போகிறாரா?

இது ஒருபுறமிருக்க நிவாரண புனருத்தாராண அமைச்சு ஒன்று இருக்கின்றது. இதற்குப்பின் மற்றவர்களை ஆட்டுவிக்கவே இவ் அமைச்சையும் ஜனாதிபதி வைத்துக்கொண்டுள்ளார்.

இந்த அமைச்சுக்கள் ஜனாதிபதியின் கையிலிருக்கும்போது தான் சிறு குழந்தைகள்போல் சிலா் வரிசையில் நிர்பார்கள்.

அப்போதுதான் இதைப்பிடி, இந்த வேலைகளைச் செய்துதா? எனக் கூறலாம்.

எனவே, சந்திரிகா என்பவா் "டொன ஹதரினா" போன்றவா் டொன ஹதரினா என்பவாநூலறுந்த பட்டம் போன்றவர்.

சில காலங்கள் பறங்கியருடன் இருந்தார். இறுதிக் காலத்தில் விமல தாம சூரியனுடன் இருந்தார். ஜனாதிபதியும் இவரைப்போலவே ஆரமப காலத்தில் மேற்கத்தைய சக்திகளுடன் ஒன்றிணைந்திருந்தார்.

பின்னா் 3ஆவது, 4ஆவது சக்திகளுடன இருந்தார். தற்போது மீண்டும் நூலறுந்து மறுபக்கம் கரணம் அடிக்கின்றார். நுலிறுந்த பட்டங்கள் காறறின் திசைககு ஏற்ப கரணம் அடித்துக்கொணடு செல்லும் அதே நிலையிலேயே ஜனாதிபதி இன்று காணப்படுகின்றார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

## வடக்கு–கிழக்கு மாகாணத்தில் புதிய இணக்க சபைகள் அமைக்க நீதியமைச்சு நடவடிக்கை

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இணக்க சபைகள் ஏற்படுத்தப்படாத பகுதிகளில் புதிதாக அவற்றை ஏறபடுத்துவதற்கான நடவடிக்கைகளை நீதியமைச்சு மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் உடபட வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் புதிதாக 23 இணக்க சபைகள் நிறுவப்படவுள்ளதாக நீதியமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் தற்போது 257 இணகக சபைகள் தமது பணிகளை மிகவும் சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகின்றன.இவற்றில் 5ஆயிரத்து 400 உறுப்பினர்கள் சேவை புரிந்து வருகின்றனர்.

இணக்க சபைகள் மூலமாக இதுவரை சுமார் ஒரு இலட்சத்துக்கும அதிகமான பிணக்குகள் சுமூகமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாக நீதிச்சேவைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இணக்க சபைகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட சிறிய பிணக்குகளில் 75 சதவீதமானவற்றுக்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. (க-9)

# இலங்கைக்கு உதவிக்கரம் நீட்ட சவுதி அரேபியா தயாராகவுள்ளது

(கொழும்பு)

இலஙகை அரசுக்கும் மக்களுக்கும் உதவிக் கரம்நீட்ட சவுதி அரேபிய் மன்னர் எப்போதும் ஆயத்தமாக இருப்பதாக இலங்கைக்கான சவுதி அரேபியாவின் தூதுவர் ஹஸ்தாத் மொகமட் இபுனு மஹ்முத் அல்அலி தெரிவித்துள்ளார்.

மடவளை மதீனா தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அஹதிய்யா மாணவர்களின் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடா்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்ந்தபோதும் மிகவும் கண்ணியமாகவும், கௌரவமாகவும் நடத்தப்படுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கை முஸ்லிம்கள் மதத்தைப் பின்பற்றுவதற்கு எடுக்கும் பல்வேறு முயற்சிகளும் பாராட்டத்தக்கது. அததுடன் மாணவர்களின் நிகழ்ச்சிகள மூலம் சமயம் தொடா்பான ஊக்கம் வெளிக்காட்டப்பட்டது அந்த அடிப்படையில் மகிழ்ச்சியடைகிறேன்.சவுதி மன்னரின் பிரதிநிதியாக நான் தொிவ்கக விருமபுவது யாதெனில இலங்கைககும் இலங்கை மக்களாகிய உங்களுக்கும் உதவ நாம் தயாராக இருக்கிறோம் எனபதாகும என்றாா். (க-9)

## கிராமங்கள் தோறும் அறிவகங்கள் மூலம் அபிவிருத்தி யாழ்.வந்த பிரதமரின் திட்ட ஆலோசகர் தெரிவிப்பு

பிரதம மந்திரி காரியாலயத்தின் திட்ட ஆலோசகர் மீகாஸ் வத்தேய நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

இலங்கையில் உள்ள கிராமங்கள் தோறும் அறிவகங்களை அமைத்து கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொளளல தொடா்பாக ஆராய்வதற்காகவே இவர் யாழ்ப்பாணம் வருகைதந்தார்.

இவர் நேற்றுககாலை யாழ்மாவட்ட செயலகத்தில யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேசை சந்தித்து இவ்விடயம் தொடாபாக ஆராயநதா இச் சந்திபபில் யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் வீரபத்திரப்பிள்ளை, கிராமஙகள் தோறும் அறிவகங்களை அமைப்பதுடன் தொடாபுடைய பிரதேச செயலா்களும், கிராம சேவையாளா்களும் கலந்து கொண்டார்கள்.

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக ஆறு பிரதேசங்களில் உள்ள 11 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு 11 கிராமங்களிலும 11 அறிவகங்கள நிறுவப்படவுள்ளன.

இவ அறிவகங்கள் கிராமங்களல் நிறுவப்பட்டு கிராமங்களை அபிவிருத்திசெய்யும் நடவடிக்கைகளும் கிராமங்களில் உள்ள மக்களை மேன்மையடையும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (அ-19)

## தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்கள் மன்னாரில் கைதாகி பிணையில் விடுதலை

தமிழர் புனா்வாழ்வுக் கழகத்தின் இரண்டு ஊழியர்கள் மன்னார் பரப்பக்கண்டானில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்கள்.

பெரியான் ஜெயசீலன் (பாலம்பிட்டி), சித்திரன் விஜயகுமார் (பெரயதம்பனை) ஆகிய இருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடநத திங்கட்கிழமை இவர்கள் பயணம்செய்த மோட்டார்சைக்கிள் பொலிஸாரின் சேதனைக்கு உட்படுததப்பட்டபோது வாகனம் தொடர்பான உரிய ஆவணங்கள் இவர்களினால் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனையடுத்து முருங்கன பொலிஸாரால் இருவரும் கைதுசெய்யப்பட்டு நீதிமனறத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது பிணையில் செல்ல அனுமதிதத நீதிமன்றம் எதிர்வரும் 27ஆம திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும எனற உத்தரவையும் பிறப்பித்துள்ளது. (ச-12)

## நிதி ஒதுக்கீடு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள வெளிச்சவீட்டை புனரமைப்பதற்கு இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெல்வுத்திட்ட நிதியிலிருந்து 2 இலட்சத்து 50ஆயிரம் ரூபாவை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஒதுக்கியுள்ளார்.

மேலும் இவர் கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் சமாச வளர்ச்சிக்கு 3 இலட்சத்து 50ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (க-35)

## ஆயுதங்களைப் பயன்படுத்த முப்படைத்தளபதி உத்தரவு

(கொழும்பு)

இராணுவச் சிப்பாய்களின் தேவைகளைப் பொறுத்து ஆயுதங்களை பயன்படுத்த உத்தரவு விட்டுள்ளதாக இலங்கை இராணுவத்தின் முபபடைகளின் பிரதம அதிகாரி தயா சந்தகிரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், இராணுவத்தினரை சினமூட்டும் நடவடிக்கைகள் நடைபெறும் போதிலும் அரச பாதுகாப்புப் படையினர் பொறுமைகாத்து தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவச் சிப்பாய்கள் தொடர்நதும் வீணாக உயிரிழக்க இடம் அளிக்கபபோவதில்லை எனத் தெரிவித்த அவர் தமது சிப்பாய்களின் உயிர்களுககு சேதம் ஏற்படுவதற்கு இடமளிக்கப்போவதில்லை என எச்சரித்துள்ளார். தேவைகளைப் பொறுத்து ஆயுதங்களை பயன்படுத்துமாறு தாம் அனைவருக்கும் உத்தரவு பிறபபித்துள்ளதாக தெரிவித்த தயா சந்தகிரி சுய பாதுகாப்பிற்காக துப்பாக்கிச்சூடு நடத்துவதை எவராலும் தடுக்கமுடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

காவலதுறையிலும் இராணுவத்திலும் உள்ள அனைத்துச் சிப்பாய்களுக்கும் மிக விழிப்புடனும் மிகப் பொறுமையுடனும் கடமையாற்றுமாறு கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது தான் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

## புத்தகக் கண்காட்சி

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு மட்டுமேயான இராமகிருஷ்ண-விவேகானந்த புத்தகக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில், கல்லூரி அதிபா திருமதி சரஸ்வதி ஜெயராஜா தலைமையில் நடைபெறும்.

சிறிலங்கா ரெலிக்கொம் முகாமையாளர் என்.சரவணபவன் மங்கள விளக்கேற்றி இக்கண்காட்சியை ஆரம்பித்துவைப்பார். பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நூலகள் சகாய விலையில் விற்கப்படும். (து)

## தமிழ்த்தினப் போட்டிகள்

எதா்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இவ் மாகாணமட்ட தமிழ்த்தினப போட்டிகள் யாவும் ஓகஸ்ட் மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும் நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் இருந்து மாகாணமட்ட போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை தயார்நிலையில் இருக்கும்படி யாழ்.கல்விவலயப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தெரிவித்துள்ளார். (அ-19)

## யானைக்கால் நோய் அபாயம் நீங்கியுள்ளது

இலங்கையில் யானைக்கால் நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

1991ஆம ஆண்டு முதல் இன்று வரை இலஙகையில் யானைக்கால் நோயாளிகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது என சுகாதார அமைச்சின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் இலங்கையில் 316பேரே இந்த நோயால் பீடிக்கப்பட்டிருந்தனர் என இனங்காணப்பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட யானைக்கால் நோய்த்தடுப்பிற்கான ஒருநாள் சிகிச்சை முறையின் காரணமாக நோய் பரவுவது வெகுவாக குறைந்துள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2010ஆம் ஆணடளவில் யானைக்கால் நோயை இலங்கையில் முற்றாக ஒழிக்கும் நோக்கத்திலேயே இந்த ஒருநாள் சிகிச்சைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இவ்வருடத்திற்கான ஒருநாள் சிகிச்சையை மேற்கொள்வதற்கு சுகாதார அமைசசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## இன்று ஒரு தகவல்

# பக்தி

ஒரு அரசன் காட்டுக்குப் போனான்.அங்கே ஒரு முனிவரைப் பார்த்தான்.அவருக்கு ஏதாவது கொடுத்துவிட்டு வரவேண்டும் என்று ஆசைப்பட்டான். நேராக அவரிடம் போனான். "சுவாமி! என்னிடமிருந்து நீங்கள் எதையாவது எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அந்த முனிவர் இந்த ராஜாவை நிமிர்ந்து பரர்த்தார். "எனக்கு உன்னிடமிருந்து பெறவேண்டியது ஒன்றுமில்லை. எனக்கு என்ன தேவையோ அதெல்லாம் இங்கேயே கிடைக்கிறது. எனது பசிக்கு உணவுதேவை... இதோ இந்த மரங்கள் எல்லாம் பழங்களைத் தருகின்றன.

என் தாகத்திற்குத் தண்ணீர் தேவை. அதைக் கொடுப்பதற்கு இங்கே ஆறுகள் உள்ளன. இந்த மரங்கள் தரும் பட்டைகளை நான் ஆடையாக உடுத்திக்கொள்கிறேன். மரங்களின் நிழலில் தங்கிக் கொள்கிறேன். மழை வந்துவிட்டால் இருக்கவே இருக்கிறது குகைகள் அங்கே போய் விடுவேன். அப்படியிருக்கும்போது உன்னிடமிருந்து நான் வாங்கிக் கொள்வதற்கு என்ன இருக்கிறது?" என்றார் முனிவர்.

ராஜா விடவில்லை. "இருந்தாலும் நீங்கள் என் அரண்மனைக்கு வரவேண்டும் அங்கே வந்து நீங்கள் ஏதாவது வாங்கிக் கொண்டுதான் போகவேண்டும்!" என்று பிடிவாதம் செய்ய ஆரம்பித்துவிட்டான். அவரும் வேறுவழியில்லாமல் "சரி" என்று கூறிவிட்டு அவனுடன் புறப்பட்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

அரணமனையில் அவரை ஒரு பக்கமாக உட்கார வைத்துவிட்டு அந்த அரசன் பூஜை அறைக்குள் போனான். அங்கிருந்த சுவாமிப் படங்களுக்கு முன்பாக நின்று கொண்டு "பகவானே! எனக்குக் குழந்தை இல்லை! ஒரு குழந்தையைக் கொடு.எனக்கு இருக்கும் செல்வம் போதவில்லை! அதனால் இன்னும் செல்வத்தைக்கொடு! இப்போதுள்ள ராஜ்யமும் எனக்குப் போதாது! இதை இன்னும் பெரிதாக்கு!" என்று வேண்டிக் கொண்டிருந்தான்.

முனிவர் உடனே அந்த அரண்மனையைவிட்டு புறப்பட்டு காட்டைப் பார்த்து நடக்க ஆரம்பித்துவிட்டார். அரசன் இதைக் கவனித்துவிட்டு அவர் பின்னாலேயே ஓடிவந்தான். "எனன இது? ஒன்றும் வாங்கிக்கொள்ளாமல் புறப்பட்டு விட்டீர்களே?" என்றான்.அதற்கு முனிவர் "பிச்சைக்காரனிடமே பிச்சை வாங்கலாமா?" என்றாராம். "யாரைச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டிருக்கின்றான் அரசன். "உன்னைத்தான் சொல்கிறேன்! இப்போது நீ பகவானிடம் பிச்சை தானே கேட்டுக்கொண்டிருந்தாய்?" என்றார் முனிவர்.

சுவாமி விவேகானந்தர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். எதற்காக இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார்? அதையும் அவரே விபரமாகச் சொல்கிறார். "கடவுளிடம் அன்பு காட்டுவது என்பது வேறு! அவரிடம் பிச்சை கேட்பது என்பது வேறு! அவர் மீது உள்ள அன்பு காரணமாக அவரை வணங்க வேண்டும். ஒரு அழகான இயற்கைக் காட்சியைப் பார்க்கிறீர்கள்! உடனே அதன் மீது ஒரு காதல பிறக்கிறது. உடனே அந்தக் காட்சியிடமிருந்து நீங்கள் எதையாவது எதிர்பார்க்கிறீர்களா? அல்லது அதுதான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறதா? அதுபோல் தான் கடவுளையும் நாம் நேசிக்க வேண்டும். நம்மால் அவரை நேசிககாமல் இருக்க முடியாது என்ற நிலைவர வேண்டும் அதற்குத் தான் பக்தி என்று பெயர்" என்கிறார் விவேகானந்தர்.

ஆனால் இப்போது உள்ள பல பக்திமான்கள் அப்படியா இருக்கிறார்கள்? எனக்கு அதைக்கொடு, இதைக் கொடு என்று சொல்லிக்கொண்டு கடவுளின் சந்நிதியில் கையேந்திக் கொண்டு தானே நின்று கொண்டிருக்கிறார்கள்.

கடவுளே ஒரு முறை பூமிக்கு வந்து இப்படிக் கையேந்திக்கொண்டு நிற்கும் பக்தன் ஒருவனுக்கு மனம் நிறைவது போல் வரம் ஏதாவது கொடுத்துவிட்டுப் போகவேண்டும் என்று நினைத்தார். அதற்காகவே இங்கு வந்தார். பக்தனைப் பார்த்தார். "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். அவன் கேட்டதெல்லாம் கொடுத்தார்.

அவன் வீட்டிலிருந்த மண்பானையை கடவுள் தன் ஆட்காட்டி விரலால் தொட்டார். உடனே அது தங்கமாகிவிட்டது. அவன் வீட்டில் இருந்த மர நாறகாலியைத் தொட்டார்.அது முழுவதும் தங்கமாகிவிட்டது. அவன் வீட்டைத் தொட்டார். அது முழுவதும் தங்கமாகிவிட்டது. பக்தனுக்கு மிகவும் சந்தோஷம்.

கடவுள் பார்த்தார். அவனைப் பக்கத்தில் கூப்பிட்டு "இன்னும் உனக்கு என்ன வேண்டும்? கேள்!" என்றார். "இன்னும் ஒன்றே ஒன்று தான் எனக்கு வேண்டும்" என்றான். "எது?" என்று கேட்டார் கடவுள். "உங்கள் ஆட்காட்டி விரல்" என்றான் பக்தன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பலாலி உயர்பாதுகாப்பு வலய வழக்கு மனுக்கள் உயர் நீதிமன்றில் விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி வதிவிட மற்றும் அதன் சுற்றுப்புற பிரதேசங்கள் தவிர்ந்த வேறெந்தப் பகுதிகளிலும் இம் மாதம் அரசாங்கத்தினால் வெளியிடப்படவுள்ள வர்த்தமானி அறிவித்தலில் அதியுயர் பாதுகாபபுப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படவில்லை என உயர் நீதிமன்றத்தினால் கடந்த திங்கட்கிழமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணையின் போதே மனுதாரர் தரப்பில் இக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி மோகன் பாலேந்திரா ஊடாக பாராளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் வல்லிப்ரம் துரை என்பவர்கள் சாாபாக பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக தனித்தனியாக இரு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ்விரு மனுக்கள் சார்பாக அரச தலைவர் சட்டத்தரணி கனகேஸ்வரன் மற்றும் சட்டத்தரணி எம்.ஏ.சுமத்திரன் ஆகியோரும் வாதாடி வருகின்றனர்.

அத்துடன்,இவ்வாறான இன்னுமொரு அடிப்படை உரிமை மீறல் மனுதாரரான பலாலிப் பகுதியைச் சேர்ந்த கே. யோகேஸ்வரன் சார்பாக மூத்த சட்டததரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தியும் கடந்த திங்கட்கிழமை மன்றில் ஆஜராகியிருந்தார்.

இம்மனுவில் பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குறித்த மூன்று மனுக்களும் பிரதம நீதியரசர் சரத். சி.என.சில்வா தலைமையிலான மூவர் அடங்கிய நீதியரசர் குழுவின முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அதன் போது மனுதாரர் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில,

இலங்கையின் ஜனாதிபதி வதிவிடம் மற்றும இதன் சுற்றுப்புறப் பகுதிகளை விட வேறெந்தப் பிரதேசங்களும் சட்டபூர்வமாக அதியுயர் பாதுகாப்பு வலயமாக எதுவுமில்லை. இம்மாதம் வெளியாகிய வர்ததமானி அறிவித்தலிலும் ஜனாதிபதி வதிவிடம், சுற்றுப்புறங்கள் மட்டுமே அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகட்னப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, வாதங்களை ஏற்றுக்கொண்ட பிரதமர் நீதியரசர்,இவ்விடயம் சம்பந்தமாக மனுதாரர்கள் யாழ். பிரதேச செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறும் நடவடிக்கைகளின் போது அவரின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுச் செயற்படுமாறும் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன், அவ் வழக்கு மீதான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12ஆம திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற)

## அம்பாறை வைத்தியசாலையில்

# புதுவித வைரஸ் காய்ச்சலால் நான்கு குழந்தைகள் மரணம்

(அம்பாறை)

அம்பாறை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 4 குழந்தைகள் புதுவித வைரஸ் காய்ச்சலால் மரணமடைந்துள்ளதுடன் வைத்தியசாலையில் குழந்தைகள் வாட்டும் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது. மேலும் அங்கு தங்கி சிகிச்சை பெற்ற 12 குழந்தைகள் அவசர சிகிச்சைக்காக பதுளை, கண்டி வைத்தியசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக அம்பாறை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் லங்கா திலக்க ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

அம்பாறை பொது வைத்தியசாலையின் குழந்தைகள் பிரிவு வாட்டில் ஒரு வயதுக்குக் குறைவான 90 குழந்தைகள் கடந்த வாரம் சுகயீனம் காரணமாக அனுமதிக்கப்பட்டனர்.

அனுமதிக்கப்பட்ட குழந்தைகளுள் 4 பேர் அடுத்தடுத்து மரணமடைந்ததையடுத்து இவ்விடயம் தொடபாக அவசர நடவடிக்கைகளை மேற்கொண்ட பணிப்பாளர் டாக்டர் ஜெயசிங்க தலைமையிலான வைத்திய குழுவினர்,பாதிக்கப்பட்ட குழந்தைகளின் இரத்தம பெறப்பட்டு பரிசோதிக்கப்பட்ட பின்னர் "கிளப் ஸியெல்லா" என்ற வைரஸ் கிருமியே காரணம் என அடையாளம் காணப்பட்டது.

இவ் வைரஸ் கிருமிகள் குழந்தைகள் பிரிவு வாட்டிலேயே அதிகம் பரவியிருந்ததை அறிந்த கொண்ட வைத்தியர்கள் உடனடியாக குழந்தைகள் பிரிவு வாட்டை மூடி சீல் வைத்ததுடன், குழந்தைகளை வேறு வாட்டிற்கும் இடமாற்றம் செய்தனர்.

மேலும் வேறு நோய்கள் காரணமாக கடந்த வாரம் வாட்டில் அனுமதிக்கப்பட்டு குணமடைந்து வீடு சென்றதன் பின்னர் மீண்டும் சுகயீனமுற்று வாட்டில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளே மரணமடைந்ததாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், இவ்விடயம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு சுகாதார அமைச்சின் விசேட வைத்திய நிபுணர் குழுவொன்று அம்பாறைக்கு விரைந்துள்ளது.

அத்துடன், இம் மாவட்டத்தில் சுகயீனமடையும் ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை உடனடியாக அரச வைத்தியசாலைகளில் அனுமதித்து அவசர சிகிச்சைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற)

# வவுனியாவில் இராணுவத்தினர் குவிப்பு; கண்காணிப்புக்குழுவிடம் ஞானம் முறையீடு

(வவுனியா)

போா நிறுத்த உடன்பாட்டினை தொடர்ந்தும் கடைப்பிடிக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் உறுதியாகவுள்ளது.

அதேநேரத்தில் வவுனியாவில் இராணுவத்தினருடைய குவிப்பு ஒரு ஆரோக்கியமற்ற நிலையை தோற்றுவித்துள்ளதாகவே நாம் கருதுகின்றோம் என வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.ஞானம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்ட தலைவர் ஜோனியிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மாலை கண்காணிப்புக் குழுவின காரியாலயத்தில் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற சந்திப்பின்போது தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் கடந்த சில தினங்களாக படையினர் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறானதொரு நிலை மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகவே உளளது. இதனைத் தவிர்க்கப் படையினருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். அதனைக் கண்காணிப்புக்குழுவே மேற்கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளுடைய தலைமைப்பீடம் போர் நிறுத்த உடன்பாட்டினை தொடர்ந்து கடைப்பிடிக்க உறுதியளித்துள்ளது.

இந்த நிலையினை படையினருக்கு கண்காணிப்புக் குழுவினரே தெளிவுபடுத்தவேண்டும். அதேநேரம் வவுனியா நகரில் ஆயுதக் குழுக்களுடைய நடமாட்டங்கள் அதிகரித்துள்ளதாக தமக்கு தகவல்கள் வந்துள்ளன என சுட்டிக்காட்டியுள்ள ஞானம், அமைதி நிலவும் வவுனியாவில் திருமலையைப் போன்றதொரு சூழலை ஏறபடுத்த அனுமதிக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சுட்டிக்காட்டிய விடயங்கள் தொடர்பாக தாம் வன்னி மாவட்ட பாதுகாப்புப் படைகளுடைய தளபதி ஜென் கவனத்திற்குக் கொண்டு வருவதாக கண்காணிப்புக்குழு மாவட்ட தலைவர் தெரிவித்துள்ளார். (க)

## ஊழலை நிரூபியுங்கள்

# பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஐ.தே. கட்சிக்கு சவால்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண விவகாரம் தொடர்பாக தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி முனைவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

ஆழிப்பேரலை நிவாரண உதவி விவகாரத்தை வைத்துக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயல்கின்றது. இயலுமாயின் அவவாறான மோசடிகள் இடம்பெற்றுள்ளதனை உறுதிப்படுத்துமாறு தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவால் விடுக்கின்றேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் பேரவையின் பத்துவருட பூர்த்தியை முன்னிட்டு நடந்த நிகழ்சசியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

ராஜபக்ஷவினர் வரலாற்றில் எப்போதுமே ஊழல மோசடிகளில் ஈடுபட்டதில்லை. அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் கூட அவர்கள் மீது சுமத்தப்பட்டதில்லை.

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பிரதமர், ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும திறமையான சட்டத்தரணிகளைக் கொண்டு அவர்கள் இரகசியப் பொலிஸிறகோ, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கோ முறையிட்டு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சவால் விடுப்பதாகவும் தெரிவித்தார். (அ-4)

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான உலர் உணவு அடுத்த மாதம் முதல் நிறுத்தம்

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதாந்தம் வழங்கிவரும் உலர் உணவு நிவாரணத்தை உலக உணவு ஸ்தாபனம் அடுத்த மாதத்துடன் நிறுத்த முடிவுசெய்துள்ளது.

உலக உணவு ஸ்தாபனம் வழங்கிவரும் உதவிகளை மறுபாிசலனை செய்யும் கூட்டம கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது. புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள் மறறும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பரதேசங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலை பாதித்த மாவட்டங்களின் தற்போதைய நிலைமை குறித்து அரச அதிபர்கள் விபரங்களைச் சமர்ப்பித்தனர்.

உலக உணவு ஸ்தாபனம் மக்களுக்கு வழங்கிவரும் உலர் உணவு பொருள் விநியோகத்தை அடுத்த மாதத்துடன் நிறுத்துவது என்றும் எனினும், தேவை ஏற்படும் பட்சத்தில் சிறிது காலத்துக்கு விநியோகத்தை மேற்கொள்வதை அந்த நிறுவனம் மறுபரிசீலனை செய்யும் என்றும் கூட்டத்தில தெரிவிக்கப்பட்டது. (ந-4)

# கைதவறிப்போன கையடக்கத் தொலைபேசி

(தளங்கிளப்பு)

கடந்த திங்கட்கிழமை காலை 10மணிக்கு முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப புறப்பட்ட 30 சிறி 1559 ஆம இலக்க தனியார் பஸ்ஸில் கிளிநொச்சியைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் இராசு இளங்கோ என்பவரால் கைதவறி விடப்பட்ட 15ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி வாகன உரிமையாளரால மீட்கப்பட்டு தனியார் பஸ் போக்குவரத்து சங்கத்திடம் ஒப்படைககப்பட்டு உரியவரிடம் சேர்க்கப்பட்டது. (து-37)

# யாழ். மாவட்டத்திலும் ஜுலை முதல் சமுர்த்தி நிவாரணம்

யாழ்.மாவட்டத்திலும் ஜுலை மாதம் முதல் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவுள்ளது. அதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிவாரணம் வழங்குவதற்கான அதிகாரிகள், ஊழியர்களுக்கான பயிற்சிகளும் நடாத்தப்பட ஒழுங்குகள மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சமுர்த்தி திட்டம் சுமார் 10 வருடத்திற்கு முன்னரே தென்பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டபோதிலும் வடபகுதிக்கு குறிப்பாக தமிழ் மக்கள் கூடுதலாக வாழும் பகுதிகளுக்கு வழங்கப்படாது இருந்தது தெரிந்ததே.

தற்போது இந நிவாரணத்தை வழங்குவது தேர்தல் வாக்குப் பெறும் நோக்கமாகவும் இருக்கலாம் என அவதானிகள் தெரிவிககின்றனர். (து-101)

# ஏழாவது கட்டமாக 340 மீன்பிடிப் படகுகள் வடமராட்சி மீனவர்களுக்கு கியூமெடிக்கா வழங்கும்

வடமராட்சிப் பகுதியில் ஆழிப்பேரலையால பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கியூமெடிக்கா நிறுவனம் ஏழாம் கட்டமாக 340 படகுகள் இயநதிரங்கள் வலைகளை வழங்கவுள்ளது.

இவ்வைபவம் இன்று காலை 10.30 மணிக்கு சுபமாபடம் கடற்றொழிலாளர் சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாச பொதுமுகாமையாளர் கே.சூரியகுமார் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் ஜேர்மன் தூதராலய அதிகாரி, கியூமெடிக்கா நிறுவனத்தின் தலைமை அதிகாரி யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இப்படகுகள் வடமராட்சி வடக்கு பிரதேச மீனவர்களுக்கும் மற்றும் வடமராட்சி கிழக்கில் மணற்காடு தொடக்கம் நாகர்கோவில் வரையான பகுதிகளில் வசிக்கும் மீனவர்களுக்கும், வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் வாழும் மீனவர்களுக்குமே வழங்கப்படவுள்ளது. (து-35)

# சிறுவர் பூங்கா திறந்து வைப்பு

மருதங்கேணி வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை சிறுவர் பூங்காவொன்று திறந்து வைக்கப்பட்டது. இபபூங்கா ஜபபான் நாட்டு அம்டா (AMDA) நிறுவனத்தால் இப் பகுதி சிறுவர்களுக்காக வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பிரதி சுகாதார பணிப்பாளர் டாக்டர் சொலமன் அமடா நிறுவன பணிப்பாளர் கெய்சீறோரனவுஸ்சியும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மருதங்கேணி வைத்தியசாலை வைத்திய அதிகாரி தலைமையில் இநநிகழ்வு இடம்பெற்றது. (து-97)

# மன்னார் விவசாயிகள் குழுவின் வடமராட்சி விஜயம்

## நிறுவன அபிவிருத்தி அமைப்புப் பலப்படுமென நம்பிக்கை

(மருதங்கேணி)

ஆண்களும் பெண்களுமாக 20 பேர் அடங்கிய மன்னார் மாவட்ட கமக்கார அமைப்பு பிரதிநிதிகள் குழு, மன்னார் கெயர், சர்வதேச உலர்வலய விவசாய அபிவிருத்தித் திட்டத்தன் திட்டப் பணிப்பாளர் கே.ஜே. குரூஸ், திட்ட உதவியாளர் என்.தேவபொன்கலன தலைமையில அண்மையில் வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்தபோது இவர்களைத் தலைமை அலுவலகப் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.உருத்திரேஸ்வரன் வரவேற்றார்.

தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பெருமபாக உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில், விவசாயிகள் விவசாயத் தலைவர்களாகவும், கீழ் மட்டத்திலுள்ள விவசாயிகள் பெரும் விவசாயிகளாக உருவாக வேண்டும் என்றும் அவர்களிடையே தலைமைத்துவப் பண்பு வளர வேண்டுமென்றும்,

தற்போது அனேகமாகக கமக்கார அமைப்புகளின தலைவர்கள் அரச உத்தியோகத்தர்களாக இருந்துவரும் நிலை மாறி உண்மையான விவசாயிகளே அவற்றின் தலைவர்களாக வரவேண்டுமென்றும, அளவுக்கதிகமாகப் பசளைகளைப் பாவிப்பதனால் நிலங்கள் பாழாகிவிடுவதுடன் அளவுக்கதிகமாக நீரைப் பாய்ச்சுவதால் கிணற்று நீரும் மாசடைந்து வருவதாகவும் தெரிவித்ததுடன் இதற்கு மாற்றீடாகத்தான் தூறல் நீர்ப்பாசன முறை கொண்டுவரப்படடுள்ளது எனவும் தெரிவிததார்.

மன்னார் கெயர் சர்வதேச உலர்வலய விவசாயத்திட்டத்தின் கீழ் விவசாய அமைப்புககளின் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்காகவே இந்த அனுபவ பகிர்வுப் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், நிறுவன அபிவிருத்தி அமைப்புக்களைப் பலப்படுத்துவதறகு இப்பணயம் உதவியாக அமையும் என்றும் கெயர் திட்டப் பணிப்பாளர் கே.ஜே.குரூஸ் தெரிவித்தார். (து-35)

# சிவராம் படுகொலை வழக்கு; சாட்சிகளின் அறிக்கை 2 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட பிரபல ஊடகவியலாளரும் அரசியல் விமர்சகருமான தருமரட்ணம் சிவராமின் படுகொலை வழக்கின் சாட்சிகளின் அறிக்கையை எதிர்வரும் 2ஆம் திகதி சமா்ப்பிக்குமாறு கடுவல நீதவான் ஜப்பா ஜானகிராஜரட்ண, கொழும்பு குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுளளார்.

சிவராம் படுகொலை குறித்த வழக்கு கடுவல நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிரதான சந்தேக நபரை பிணையில் விடுவிக்குமாறு சந்தேகநபரின் சட்டத்தரணி கூறியபோதும் அதனையும் நீதவான் நிராகரித்து எதிர்வரும் 2ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-7)

# யாழ்.கல்வி வலயம் நடாத்தும் கணனிப்பொறி திருத்தும் பயிற்சி

யாழ்.கல்வி வலயத்தினால் நடாத்தப்படவுள்ள கணனிப்பொறி திருத்தும் பயிற்சியின் பிரிவு II யாழ். இந்துக்கல்லூரியில் எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியில் 2005ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் விண்ணப்பிக்க முடியும் எனவும், தங்கள் பதிவுகளை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். இந்துக்கல்லூரி அதிபரிடம் மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கபபட்டுளளது.

இலவசமாக வழங்கப்படும் இரண்டு மாத கணனிப்பொறி திருத்தும பயிற்சிநெறிக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும் எனவும் பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவிககப்படுகிறது. (அ-19)

# 5.6 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் சிக்கியது

## இலங்கைத் தமிழர் உட்பட மூவர் கைது

புதுக்கோட்டையில் 5.6 கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின் போதைப்பொருள் சிக்கியது. இச்சம்பவத்தில் இலங்கைத் தமிழர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக மத்திய போதைப்பொருள கடத்தல் தடுப்புப் பிரிவு மண்டல இயக்குனர் சங்கர் ஜிவால் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது,

புதுக்கோட்டைப் பகுதியில் இருந்து இலங்கைக்கு போதைப்பொருள் கடத்த இருப்பதாக தகவல் கிடைத்தது. மத்திய போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் புதுக்கோட்டையில் இரகசிய கண்காணிப்பில் ஈடுபட்டனர். புதுக்கோட்டையில் பஸ் நிலையத்தில் நின்றிருந்த இரண்டு பேர் சிக்கினர்.

அவர்களைச் சோதனையிட்ட போது 5.670 கிலோ எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருள் இருந்தது. சர்வதேச அளவில் இதன் மதிப்பு 5.6 கோடி ரூபாய். போதைவஸ்து வைததிருந்த நபர்களில் ரவிசங்கர் என்பவர் இலங்கையைச் சேர்ந்தவர். மற்றொரு நபா சென்னையைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்தது. சென்னையைச் சேர்ந்தவரின் பெயர் ஜி சம்பத் எனக் கூறப்படுகின்றது.

இருவரையும் விசாரித்தபோது அருகில உள்ள லொட்ஜில் ரகுபதி என்பவர் தங்கியிருப்பது தெரிந்தது. திருநெல்வேலியைச் சேர்ந்த ரகுபதி மும்பையில் இருந்து ஹெரோயினை கடத்தி வந்துள்ளார். கடத்தல் தடுப்புப் பிரிவினர் உடனடியாக அந்த லொட்ஜுக்குச் சென்று ரகுபதியைப் பிடித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையரான ரவிசங்கர், சென்னையில் 2.6 கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருள் சிக்கிய விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர் என்பதும விசாரணையில் தெரிய வந்தது. மூன்று பேரும் கோர்ட்டில் ஆஜர்படுததப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். (க)

# தேசிய விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

31ஆவது தேசிய விளையாட்டு விழாவின் பெண்களுக்கான கூடைபபந்தாட்டப் போட்டி, ஆண், பெண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டி, பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி என்பன எதிர்வரும் 23ஆம் 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்காக வடக்கு -கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவபபடுத்தி யாழ்.மாவட்ட பெண்கள கூடைப்பந்தாட்ட அணியும், ஆண், பெண் மேசைப் பந்தாட்ட அணியும், பெண்கள் கிரிக்கெட் அணியும் நாளை கொழும்பு செல்லவுள்ளன.

இப்போட்டிகளில், பெண்களுக்கான கூடையபந்தாட்டப் போட்டி சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கிலும், ஆண், பெண்களுககான மேசைப் பந்தாட்டப் போட்டி கல்கிசை சென் தோமஸ் கல்லூரியிலும், பெணகளுக்கான கிரிக்கெட் போட்டி கொழும்பு பல்கலைக்கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (அ-19)

# சொற்பொழிவு

சிறி வல்லிபுர ஆழ்வார் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறுதோறும் கம்பராமாயண தொடர் சொற்பொழிவினை பிரபல எழுத்தாளரும், சொற்பொழிவாளருமான சொல்வேந்தர் பொன்சுகந்தன் நிகழ்ததி வருகிறார். இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரம மடாதிபதி வை.ஆனந்தராசாவின் ஆசியுரையுடன ஆரம்பமானது. அதன் அறிமுகவுரையை ம.பகீரதன் நிகழ்த்தினார். (து-101)

# போர் நிறுத்தம் சீர்குலைவதை தடுக்க ஐ.தே.க பூரண ஒத்துழைப்பு வழங்கும்

யுத்த நிறுத்த ஒப்பநதத்தினை தக்க வைக்கும் முயற்சியாக டோக்கியோ மாநாட்டில் இணைத்து தலைமைத்துவம் வழங்கிய நாடுகளின் பிரதிநிதிகள் குழு விரைவில் இலங்கைக்கு வரவிருக்கிறது. இவ்வேளையில், சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளுக்கு ஐ.தே.க. எந்தவிதமான குறுகிய அரசியல் நோக்கமுமின்றி தமது பூரண ஒத்துழைப்பினை வழங்கவுள்ளதாக ஐ.தே.கவின பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளா சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவா மேலும் தெரிவிக்கையில், போர் நிறுத்த உடன்படிக்கைக்கு அச்சுறுத்தல ஏற்பட்டிருக்கின்றது, விடுதலைப்புலிகளின் நிலைபபாட்டில எந்த நேரத்திலும் மாற்றங்கள் நிகழலாம், அதன் விளைவுகளும் பாரதூரமானவையாக இருக்கும்.

போர்நிறுத்த உடன்படிக்கை தவறானதெனவும், அதனைச் செய்துகொண்டதைக் கண்டித்துவரும் ஜே.வி.பி மற்றும் ஹெலஉறுமய தரப்புக்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். போர் நிறுத்த உடன்படிககை சட்டரீதியானதாகும். இதனை உயர் நீதிமன்றம கூட அங்கீகரித்துள்ளது. போர் நிறுத்தம் நீடிப்பதனால்தான் நாட்டில் ஓரளவேனும் அமைதியைப் பேண முடிந்துள்ளது.

இல்லையென்றால் நிலைமை வேறு விதமாக மாற்றம் கண்டிருக்கும். மேலும போர் நிறுத்த உடன்படிக்கையை ஜனாதிபதி சந்திரிகா கூட இன்று ஏற்றுககொண்டிருக்கினறார்.

இதன் மூலம் யதார்த்தபூர்வமான உண்மை வெளிக்கொணரப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையை முறிவடையாமல பாதுகாப்பதில் நாம் உறுதியான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கின்றோம் எனவும் பீரிஸ் தெரிவித்தார். (க)

# ஆடிப்பூரணை தின விழா

(யாழ்ப்பாணம்)


தாவடி கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினர் நடாத்தும் ஆடிப்பூரண தின விழா இன்று மாலை 3.30 மணிக்கு தாவடி தெற்கு ஸ்ரீகாளி அமபாள் சனசமூக நிலையத்தில் ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலையத தலைவர் இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு ஆன்மீக உரையை ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரம இணைச் செயலாளர் சி.சிவமோகன் ஆற்றவுள்ளார். (க-9)

# தன்னம்பிக்கையூட்டும் அழகு...



அழகுக்கலை என்பது இன்றைய உலகில் அத்தியாவசியமாகிவிட்டது. காரணம், பெண்கள் தன்னம்பிக்கையோடு முன்னேறிச்செல்ல அழகும் ஒரு காரணமாகிவிட்டது. தான அழகாக இருக்கிறேன என்று மனதால் உணரப்படும ஒவ்வொருவரும மலாந்த முகத்துடன் காட்சி தருகிறார்கள். தாங்கள் மேற்கொண்ட பணியில் முன்னேறியும் செல்கிறார்கள். நாம் அழகாக இல்லை



என்று நினைக்கும் யாரும் தன்னம்பிக்கையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து பிறகு மனதளவில் உருக்குலைந்து போய்விடுகிறார்கள் என்று மனநல மருத்துவர்கள் கூறுகிறாாகள். இப்படி மனதளவில் தான அழகாக இல்லை என்று வாடும பெண்கள், மிக எளிதாக தங்களை அழகாக மாற்றியமைத்துக்கொளளலாம்.

### முகப்பரு

நாம் ஒருவரைப் பார்க்கும் போது சட்டென்று நம் மனதில் படிவது அவரது முகமாகும். அந்த முகத்தில் பருக்களோ, கரும்புள்ளிகளோ இருக்கும் பட்சத்தில் அவற்றைப் போக்குவது அவசியமாகும். பருக்களைப் போக்க ஒரு சில வாரங்கள போதுமானது. முகத்தில் பருக்கள் இருக்கும்போது அவற்றைக் கிள்ளவோ, நகத்தால் நசுக்கி எடுக்கவோ கூடாது. அப்படிச் செயதால் பரு இருந்த இடத்தில் வடுக்களாக மாறிவிடும். எண்ணெய் அதிகம் சேர்த்த உணவுகளை சேர்த்துக் கொள்ளக்கூடாது.

சோபபுப் போட்டு முகம் கழுவாமல் கடலை மாவு கொண்டு முகத்தைக் கழுவி வர வேண்டும். இதனால பருக்கள் குறைந்து முகம் பளபளப்பாகும்.

### கண்ணின் கருவளையம் மறைய...

சில பெண்களுக்குக் கண்களைச் சுற்றி வருவளையம் இருக்கும். அதை நீக்க,

வெள்ளரி, உருளைக்கிழஙகு இரண்டையும் நன்றாக அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு சுத்தமான மெல்லிய பருத்தி துணியை ரோஸ் வாடடரில் நனைத்து கண்ணின மீது வைத்து அதன் மீது அரைத்த விழுதுகளைப் போட்டு இரவு படுக்கவேண்டும். இவ்வாறு 5 நாட்கள் செய்தால் கருவளையம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். ஓய்வு இன்மை, சரியான உணவுப் பழக்கம் இலலாமையே இதற்குக் காரணமாகும். தூக்கம் வராவிட்டால் கூட நன்றாக கண்களை மூடியபடி ஓய்வெடுக்க வேண்டும்.

வாரம் ஒருமுறை மூடிய கண்களின் மீது ஐஸ்கட்டி அல்லது வெள்ளரிக்காயை வெட்டி வைத்து கண்களுக்கு குளிர்ச்சியைக் கொடுக்க வேண்டும. காய்கறி, கீரை முதலிய உணவுப்பொருடகளையும் உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

### கழுத்தில் கருவளையம்

கழுத்தில் நகை போடுவதால் கழுத்தைச் சுற்றி பலருக்கு கறுத்துவிடும். இதைப் போக்க கோதுமை மாவில் வெண்ணை கலந்து கழுத்தைச் சுற்றிப் பூசி 20 நிமிடம் கழித்துக் குளிக்க வேண்டும். இவ்வாறு தினசரி செய்து வந்தால் கழுத்துக் கறுப்புக் கறை அகன்றுவிடும்.

### உதடு அழகாக...

சிலருக்கு உதடு கறுத்து இருக்கும். இதற்குக் காரணம் உடம்பில் சூடு அதிகமாக இருப்பதால்தான். இதைப்போக்க வெந்தயம் 1ஸ்பூன் இரவில் ஊற வைத்துக் காலை எழுந்ததும் 1 டம்ளர் மோரில் அந்த வெந்தயத்தைப் போட்டுக் குடித்துவிட வேண்டும். இரவு வெண்ணை சிறிதளவு உதட்டில் தடவவும். ஒரு சிறு உருண்டையை முழுங்கிவிடவும் வேண்டும்.

இவ்வாறு செய்து வந்தால் உதடு நன்றாக இருக்கும்.

### முகத்தைப் பாதுகாக்கும் முறை

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான சருமம் உள்ளது. அதில் ஒன்று உலர்ந்த சருமம். உலர்ந்த சருமத்திற்கு கரட்டை நன்றாக அரைத்து ஒரு ஸ்பூன் தேன் கலந்து முகத்தில் பூசி, 20 நிமிடத்தின் பின குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும.

எண்ணெய் வழியும் முகத்திற்கு மருந்துக் கடைகளில் 'ஹெர்பல் ஸ்கின் டொனிக்' கிடைக்கும். இதனை இரவில் முகத்தில் பூசிக் கொள்ளவும். இவ்வாறு செய்து வந்தால் கறுத்துப் போவது, வரண்டு போவது, மற்றும் பருககளிலிருந்து முகத்தைக் காப்பாற்றலாம.

# மகளிர் உலகம்





## நீங்கள் எந்த வகை?

அழகு, உடல் அமைப்பு, குணத்தைப் பொறுத்து பெண்களை நான்கு பிரிவாக முன்னோர்கள் பிரித்திருக்கிறார்கள். அவை,

பத்தினி, சித்தினி, சங்கினி, ஹஸ்தினி.



**பத்தினி:**

*முகம் சந்திரனைப் போல் இருக்கும்.

*அகன்ற கண்கள், அடிக்கடி இமை மூடாமல் தெளிவாக உற்றுப்பார்ப்பார்கள்.

*உடல் உறுப்புகள் அழகாக மென்மையைப் பறைசாற்றும்.

*தாமரைப்பூவின் வாசம் அவர்களிடம் வீசும்.

*அதிகமாக உண்ண மாட்டார்கள்.

*உடல்மெலிந்து நல்ல நிறத்துடன் இருப்பார்கள்.

*மிதமான சப்தத்தில் பேசுவார்கள்.

*இசை, நடனத்தில் ஆர்வம் இருக்கும்.

*தானம் செய்யும் சிந்தனை உண்டு.

*பெண்களில் உயர்ந்தவர்களாக பத்தினி ரகத்தினரை சொல்வார்கள். இத்தகைய பெண்களைக் கணவர்கள் ஆராதனை செய்வார்கள்.

**சித்தினி:**

*மான் விழி.

*மிதமான உடல்வாகு.

*மூக்கு பூப்போல மலர்ந்திருக்கும்.

*இசை, சிற்பங்களில் ஆர்வம் இருக்கும்.

*தரல் வளம் உண்டு.

*கல்வியில் மேன்மையுடையவர்.

*நிமிர்ந்து நடப்பார்கள்.

*அழகை ஆராதிக்கும் ஆண்களுக்கு அடிமையாவார்கள்.

*மனதில் சங்கடமான சிந்தனை இருக்கும்.

*இவ்வாறான பெண்களிடம் ஆண்களை வசீகரிக்கும் சக்தி நிறைய இருக்கும். அதை செயல்படுத்தவும் செய்வார்கள்.

**சங்கினி:**

*மெலிந்த தோற்றம்.

*அவயவங்கள் சிறிதாக இருக்கும்.

*கழுத்தில் மூன்று சுருக்கங்கள் விழும்.

*தாடை நீளமாக இருக்கும்.

*நல்ல நிறத்துடன் இருப்பார்கள்.

*கரகரப்பான சத்தம்.

*உணவில் அதிக விருப்பம் இருக்கும்.

*நடையும் செய்கைகளும் பதட்டத்துடன் இருக்கும்.

*சிவப்பு உடைகளை விரும்புவார்கள்.

*எதிலும் திருப்தி குறைவாகவே இருக்கும்.

*அதிகளவு ஆசைப்படுவார்கள்.

**ஹஸ்தினி:**

*உதடுகள் தடித்திருக்கும்.

*பெரிய குட்டையான அவயவங்களைப் பெற்றிருப்பார்கள்.

*கழுத்து தள்ளமாக இருக்கும்.

*கடினமான சிந்தனை அடிக்கடி தோன்றும்.

*நாணம் இருக்காது.

*அதிகம் உண்பார்கள்.

*நன்றாகச் சமைப்பார்கள்.


*செய்கிற செயலில் சுத்தம் இருக்கும்.

*சாப்பாட்டு ராமனான கணவன்மார்களுக்கு இவர்களை அதிகம் பிடிக்கும்.

## சமைத்துச் சுவைப்போம்

### பூரி

**தேவையான பொருட்கள்:**



| | |
|---|---|
| கோதுமை மா | - 1 சுண்டு |
| கிழங்கு | - 250g |
| பெரிய வெங்காயம் | - 1 |
| பச்சை மிளகாய் | - 2 |
| செத்தல் மிளகாய் | - 3 |
| கடுகு | - சிறிதளவு |
| சீரகம் | - சிறிதளவு |
| சோம்பு | - தாளிதம் செய்வதற்கு |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| மஞ்சள் | - சிறிதளவு |
| உப்பு | - தேவைக்கேற்ப |

**செய்முறை**

***கறி தயாரிக்க:***

கிழங்கை வேக வைத்து மசித்துக் கொள்ளவும். வெங்காயம், மிளகாய் என்பவற்றை நறுக்கி வைத்துக் கொள்ளவும். பின்பு வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் சிறிதளவு இட்டுக் கடுகு, சீரகம், சோம்பு என்பவற்றை இட்டு தாளிதம் செய்யவும். பின்பு வெங்காயம் பச்சைமிளகாய் என்பவற்றை சேர்க்கவும். அதன் பின் மசித்த கிழங்கைச் சேர்க்கவும். மஞ்சள், உப்பு சேர்த்துக் கிளறி இறக்கவும்.

***பூரி தயாரிக்க:***

கோதுமை மாவுடன் உப்பு நீா சேர்த்து தண்ணீர் விட்டு குழைத்து உருண்டை தயாரிக்கவும். உருண்டை கைக்கு மெதுவாக இருத்தல் வேண்டும். பின்பு எலுமிச்சம் பழ அளவு உருண்டைகள் செய்து கொள்ளவும். அவற்றை அப்பளம் போல் தட்டி எண்ணெய் நன்கு கொதித்ததும் அதிலிட்டு பொரிக்கவும். இது பொங்கி வரும்போது உடையாமல் கவனமாக பொரித்தெடுத்து கறியுடன் பரிமாறவும்.

## உடல் மெலிய வேண்டுமா?

'சிக்'கென்ற உடலமைப்பைப் பெற நடை நல்ல பயிற்சி. விரைவாக நடப்பதால் நிச்சயமாக உடல் மெலியும். வெளியே சென்று நடக்க முடியாதவர்கள் காலையில் எழுந்ததும் ஓரிரு நிமிடங்கள் 'Spot jogging(நின்ற இடத்திலிருந்தே கால்களை மாற்றி மாற்றி வைத்தல்) செய்யலாம். சிறிது நேரம் கழித்து 10 –15 நிமிடங்கள் வீட்டினுள்ளேயே நடக்கலாம்.

பருமனாக உள்ளவர்கள் அநேகமாக காலை உணவைத் தவிர்த்து விடுகின்றார்கள். ஆனால் இது உடல் நிலையைப் பாதிக்கும். பொரித்த எணணெய் சேர்ந்த உணவு வகைகளையும், அதிகமாக இனிப்பு சேர்ப்பதையும் தவிப்பது அவசியம்.

## நோய் தீர்க்கும் சாறுகள்

### கரட் சாறு



இதில் விற்றமின் A நிறைந்துள்ளது. மேலும் விற்றமின் B, C, D, E, G, K என்பனவற்றுடன் சோடியம், பொட்டாசியம், இரும்பு, கல்சியம், மக்னீசியம் போன்ற கனிப்பொருள்களும் அடங்கியுள்ளன. இலகுவில் சமிபாடடைந்து விடக்கூடிய கரட் சாறு உணவைச் சுத்திகரிக்கும் சக்தி வாய்ந்தது. ஒரு லீற்றர் கரட்சாறு 9 கிலோ கல்சியம் வில்லைகளுக்கு சமமானது.

### அப்பிள் சாறு

அப்பிள் சாற்றில் விற்றமின்களான A, $B_1$, $B_2$, $B_6$, C என்பன அடங்கியுள்ளன. இதிலுள்ள விற்றமின் 'B' சமிபாட்டுக்குரிய நொதியங்களைத தூண்டிச் சுரக்க வைத்து சமிபாட்டை நன்னிலைப்படுத்துகின்றது. அப்பிள் சாறு இதய நோயாளிகளுககு பயனுள்ளது.

### திராட்சைச் சாறு

இரும்புச் சத்து நிறைந்த திராட்சைச் சாறு சேதமடைந்த இழையங்களை விரைவில் திருத்தி அமைக்கும். சிற்றிக் அமிலம், பொட்டாசியம், சோடியம், கல்சியம ஆகியனவும் இதில் அடங்கியுள்ளன. குருதியைச் சுத்திகரிக்கக்கூடிய அற்புதமான தன்மைகளை இது கொண்டுள்ளது.

# ஓரிரு வாரங்களில் பிறப்புச்சான்றிதழ் தேவைப்படுவோர் விண்ணப்பிக்கலாம்

## -உதவிப் பதிவாளர் நாயகம் சதாசிவஐயர்

(யாழ்ப்பாணம்)

தமது பிறப்புச் சான்றிதழ்களைப் பெறவிரும்புபவர்களை உரிய விணணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி உரியதொகை முத்திரையையும் ஒட்டி தபால் மூலம் மேலதிக மாவட்ட பதிவாளருக்கு அனுப்பிவைத்தால் ஓரிரு வாரங்களில் அதனைப் பெற்றுக்கொள்ளமுடியும் என வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயர் தெரிவித்துள்ளார்.

பிறப்புச் சான்றிதழ்களைப் பெறவிரும்புபவர்கள் உரிய விண்ணப்பப் படிவததைப் பூரணப்படுத்தி அல்லது வெள்ளைத்தாளில் பிறப்புச் சான்றிதழ் இலககம், பெயர், தகப்பனின் முழுப்பெயர், தாயின் கன்னிப்பெயர், பிறந்த இடம், பிறந்த திகதி, விலாசம் போன்ற விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு, அத்துடன், பிறப்புச் சான்றிதழ் இலக்கம் தெரிந்தால் இருபத்தைந்து ரூபா முத்திரை ஒட்டியும் பிறப்பு சான்றிதழ் இலக்கம் தெரியாதவிடத்து ஐம்பது ரூபா முத்திரை ஒட்டியும் தபால் மூலம் யாழ்.மாவட்ட செயலக மேலதிக மாவட்ட பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில் ஓரிரு வாரங்களில் பிறப்புச் சான்றிதழ்கள் விண்ணபபதாரியின் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இதேவேளை, பிறப்புச் சான்றிதழ்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படின் மட்டும் தேவைக்குரிய காரணங்களை உறுதிப்படுத்தி ஆவணங்களுடன் மேலதிக மாவட்ட பதிவாளரைச் சந்தித்து பெற்றுக்கொள்ளமுடியும்.

அத்துடன, பிறப்பு சான்றிதழ்களைப்பெறுவதற்கு எநதவித அமைபபுக்களையோ நிறுவனங்களையோ நாடவேண்டிய அவசியம் இல்லை எனவும சதாசிவ ஐயர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-19)

## பாதிப்புற்ற மாணவருக்கு சைக்கிள்கள் கையளிப்பு

(மருதங்கேணி)

சுனாமி அனர்த்தங்களால் பாதிககப்பட்ட வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் ஒருதொகுதி சைக்கிள்களை வழங்கியுள்ளது.

சைக்கிள்கள் வழங்கும் வைபவம் கடந்த சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அதன் தலைவர் மு.தங்கவேல் தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு இராம கிருஷ்ணமிசன தலைவர் ஸ்ரீமத்சுவாமி ஆதம கணானந்தஜி மகராஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பாதிக்கபபட்ட 21 மாணவர்களுக்கு சைக்களகளை வழங்கினார். (க-35)

## போரூட் நிறுவனத்தினால் பாதிப்புற்ற மீனவருக்கு கட்டுமரங்கள் வழங்கப்படும்

(மருதங்கேணி)

வடமராட்சி பகுதியில் சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கட்டுமரங்களை வழங்க போரூட் நிறுவனம் முன்வந்துள்ளது.

சிறு தொழில்செய்யும் தொழிலாளர்களுக்கே இக்கட்டுமரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி இன்பருட்டி கடற்றொழிலாளர் சங்கத்திற்கு 35 கட்டுமரங்களும் சக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 48 கட்டுமரங்களும் வலிவடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச அங்கத்துவ சங்கங்களான மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கம் காங்கேசன்துறை கடற்றொழலாளா சங்கம் ஆகியவற்றுக்கு 40கட்டுமரங்களும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் உபசமாச அங்கத்துவ சங்கங்களான மணறகாடு, குடததனை, பொறபதி ஆகிய இடஙகளிலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு 27கட்டுமரங்களும் வழங்கபபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-35)

# அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்டே சில ஊடகங்கள் செயற்படுகின்றன

## ஊடகவியலாளர் லகஸ்மன குணசேகர சுட்டிககாட்டு

(கொழும்பு)

தென்னிலஙகையில் உள்ள சில ஊடகங்கள் அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்டு செயற்படுகின்றன. இதனால அந்த ஊடகங்கள் நடுநிலையோடு செயற்படவும் தவறிவிடுகின்றன.

இவ்வாறு ஹெரு பத்திரிகைக் குழுவைச் சேர்ந்த பிரபல பத்திரிகையாளா லக்மன குணசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள ஊடகவியலாளர்களுக்கு இடையிலான கருத்துப் பரிமாறல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடல் கொழும்பு வெள்ளவத்தை தர்மராம வீதியில் உள்ள பெண்கள் ஆய்வு நிறுவனத்தில் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியததினரால் அழைக்கப்பட்டிருந்த தமிழ் ஊடகவியலாளர்களும் ஹிரு பத்திரிகைக்குழு மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்தைச் சேர்ந்த 'சிங்கள ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

லக்மன குணசேகர அங்கு கருததுத் தெரிவிக்கையில்,

அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஊடகஙகளுக்கும், இலங்கையிலுள்ள ஊடகங்களுக்குமிடையில் பல்வேறு வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

இதற்கு அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்டு ஊடகங்கள் செயற்படுவதே முக்கிய காரணமெனக் குறிப்பிட்டார். ஊடகங்கள் மொழி அடிப்படையில் செயற்படுவதாக இங்கு சுட்டிக்காட்டிய அவர் இதனால் வடக்கின் நிலைமைகள் தென்பகுதிக்கும், தென்பகுதியின் நிலைமைகள் வடபகுதிக்கும் சரியான முறையில் சென்றடைவதிலலையெனவும் தெரிவித்தார்.

இலங்கையில், ஊடகவியலாளர்கள் சுதந்திரமான முறையில் தமது கருத்துக்களை வெளியிட முடியாத துர்பபாக்கியநிலை காணப்படுவதாக இங்கு குறிப்பிட்ட ஊடகவியலாளர் லக்மன் குணசேகர, எனினும், இந்த நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, போர்ச்சூழலும் சிங்கள ஊடகமும் என்ற தலைப்பில் ஹிரு பத்திரிகைக் குழுவைச் சேர்ந்த றோஹித் பான அங்கு கருத்துத்தெரிவிக்கையில்,

கல்வி,தொழில்வாய்ப்பு, பிரஜா உரிமை பறிமுதல், அரச கரும மொழியாக சிங்கள மொழி அறிவிக்கப்பட்டமை, சொத்துப் பறிமுதல் செய்யபபட்டமை, கறபழிப்புப் போன்ற காரணிகள ஊடாக, கடந்த 20வருட யுத்தத்துக்கு முன்னர் வடக்கு-கிழககு மக்கள் மீது ஒருதலைப்பட்சமான யுத்தமொன்று திணிக்கப்பட்டிருந்தது.

இதையடுததே, நாட்டில் கடந்த 20வருடங்களுக்கும் மேலாக யுத்தமொன்று இடம்பெற்றுவந்துள்ளதாக அவர் குறிபபிடடார்.

இநத நிலையில் ஊடகங்களின் நடுநிலைத தன்மை குறித்து இங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

கடந்த 1995ஆம் ஆண்டு நவாலி புனித பீற்றர் ஆலயம் மது இலஙகை விமானப் படையினர் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் 150பேர் கொல்லப்பட்ட சமபவம் தொடர்பில் ஹிரு பத்திரிகை மட்டுமே செய்தி வெளியிட்டதாகவும், அப்போது தமது பத்திரிகை விடுதலைப் புலிகளின் சாரபுப்பத்திரிகையென தெற்கிலுள்ள பலராலும் இனங்காணப்பட்ட தாகவும் சுட்டிக்காட்டினார்.

எனினும் அதற்கு முன்னர் ஜே.வி.பி.பத்திரிகையென நமது பத்திரிகை முத்திரை குத்தப்பட்டிருந்தாகவும் றோஹித்த பான இங்கு தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் தென்பகுதி ஊடகவியலாளாகள் குழுவுடன் வடபகுதிக்குச் சென்று திரும்பிய அனுபவங்கள் பற்றியும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்ட ரோஹித பான, வடக்குப் பகுதியில் இடம்பெறும் சம்பவஙகளை தென்பகுதி ஊடகங்கள் மிகைப்படுத்திக் கூறுவது தொடர்பிலும் விரிவாக எடுத்துக் கூறினார். (க-4)

## பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுககு ஒஸ்பாம் நிதியுதவி தொடரும்

வடமராட்சி கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிகை அலங்கரிபபுத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மறறும் மனவியாபாரிகள் என 136 பேருக்குக் கடந்த வெள்ளிக்கிழமை ஒஸ்பாம் நிறுவனததினரால் 10 ஆயிரம் ரூபா தொடக்கம் 25 ஆயிரம் ரூபாவரை ஒன்பது இலடசம் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது.

கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் சமாசத் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய ஒஸ்பாம் நிறுவனத் திட்டமிடல் பணிப்பாளர் செந்தில் குமரான் சுனாமிப் பேரலையால் பாதக்கப்பட்ட மேற்படி தொழிலாளர்கள் மீண்டும் அவர்களது தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்காகவே இந்நிதியுதவி வழங்கப்பட்டது என்றும், தவறவிடப்பட்ட தொழிலாளர்களுக்கும் இந்நிதியுதவி வழங்கப்படுமெனறும், இததிடடம் இந்த நிதி உதவியுடன் நின்றுவிடாது மேலும் தொடரும் எனறும் தொிவித்தார். (து-97)

# இலவச கல்வி, சுகாதார சேவைகளுக்கு பெருந்தோட்டத்துறை பெரிதும் உதவியது

## நிதி அமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

இலங்கையின் இலவசக் கல்விக்கும் இலவச சுகாதார சேவைகளுக்கும் வேண்டிய நிதியினைப் பெற்றுக்கொடுக்க மலைநாட்டின் பெருந்தோட்டத்துறையே உதவி புரிந்ததாக நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பான சட்ட மூலம் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் சரத் அமுனுகம, இலவசக் கல்விக்கும், சுகாதார மேம்பாட்டுக்கும துணைபுரிந்த பெருந்தோட்டத்துறையின் இந்திய வம்சாவழியினருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

பிரித்தானிய ஆட்சியினர் தேயிலை மற்றும் கோப்பிப் பயிர்ச்செய்கையினை அறிமுகப்படுத்தியமை காரணமாக அங்குள்ள சிங்கள மககளின் காணிகளுககு பாதிப்பு ஏற்பட்டாலும் ஏனைய பகுதிகளிலுள்ள சிங்களவர்கள் இதன் மூலம் நன்மையினைப் பெற்றனர் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல,

மலைநாட்டுக்கான போக்குவரத்தினை முறைப்படுத்தாமல் எவ்வித அபிவிருத்திகளையும ஏறபடுத்த முடியாது. எனவே கண்டிக்கு கொழும்பிலிருந்து ஒரு மணித்தியாலத்தில் செல்லக் கூடிய பாதை மற்றும் வானூர்தித் தளமொனறை அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். (க-4)

# முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாக்க அனைத்து தலைவர்களும் ஒன்றிணையவேண்டும்

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அனைத்து முஸ்லிம் தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் தலைவர்கள் பல்வேறு கட்சிகளாகப் பிளவுபட்டு செயற்படுவதனமூலம் அனைத்து முஸ்லிம் சமூகத்துக்கும் பாரிய அநீதி இழைக்கப்படுகின்றது.

எனவே, இவர்கள் இவ்வாறு செயற்படுவதனை கைவிட்டு முஸ்லிம் மககளின் நலனுக்காக செயற்படவேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

சப்ரகமுவ மாகாணசபை ஏற்பாடுசெய்திருந்த மீலாத் நபி விழாவில் நேற்று முன்தினம் கலந்துகொணடு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று இந்த நாட்டில் முஸலிம் மககள் அவர்களது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் அவர்களுக்குக் கிடைககவேண்டியவற்றை பெற்றுக்கொள்வதற்கும் ஒன்றுபட வேண்டிய காலம் உருவாகியுள்ளது.

இன்று தலைவர்கள் அரசியல் ரீதியககப் பிளவுபட்டு தலைமைத்துவ ரீதியாகப் பிளவுபட்டு உள்ளார்கள்.

இவ்வாறு முஸ்லிம் தலைவர்கள் வெவ்வேறாகப் பிரிந்து காணபபடுகின்றாாகள் அவர்கள் இவ்வாறு பிளவுபட்டிருப்பதினாலேயே முஸ்லிம் மக்கள் பெரும் கஸ்ரங்களை எதிர்கொள்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

# இப்படியும் இருக்கிறார்கள்

(தனங்கிளப்பு)

அண்மையில் முகமாலையிலிருந்து யாழ்.நோக்கிச்சென்ற தனியார் வாகனத்தில் பயணித்த ஒருவரது கைப்பை சாவகச்சேரி நகரப் பகுதியில் விழுந்ததைக் கண்டெடுத்த சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் 4 ஆம் தரத்தில் கல்வி பயிலும் ச.யசிந்தா என்ற மாணவி அதனைச் சாவகச்சேரி பேருந்து நிலைய நேரக் கண்காணிப்பாளர் சற்குணநாதனிடம் ஒப்படைத்தா.

12ஆயிரம் ரூபா இருந்ததாகக் கூறப்படும் அக்கைப்பை பின்னர் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் அவர் அதனைக் கண்டெடுத்து ஒப்படைத்த அச்சின்னஞ்சிறு மாணவிக்கு ஒரு நன்றி கூடக் கூறாமல் சென்றது குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

(து-37)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை 9 சதாம் கதை

## அழைத்தது அரசியல்!

பி.ஜே.ராஜய்யா

சதாமின் மாமாவைத் தேடி பாக்தாத் வீட்டுக்கு நிறையப் பேர் வந்து போவார்கள். அவர்கள் இருட்டிய பிறகு தான் வருவார்கள். அவர்களில் பல புதுமுகங்கள் இருக்கும். சில முகங்கள் மட்டுமே அடிக்கடி வந்துபோகும்.


மறுமலர்ச்சிக் கட்சியினரின் அணிவகுப்பு

அவர்கள் இரவெல்லாம் விழித்திருந்து மாமாவோடு பேசிக்கொண்டிருப்பார்கள். பேச்சு ரகசியமான குரலில் இருக்கும். பேச்சில் அரசியல் இருக்கும். அடிக்கடி துப்பாக்கியும் அடிபடும். காலையில் விழித்துப் பார்த்தால் அவர்கள் காணாமல் போயிருப்பார்கள்.

சதாமுக்கு விவரம் புரிபடாத பருவத்தில் மாமா மற்றும் அவரது நண்பர்களின் நடவடிக்கைகள் புதிராக இருக்கும். என்ன, ஏது என்று விசாரித்தாலும் விளக்கம் கிடைக்காது.


19 வயது சதாம்

அவன் வளர வளர விஷயம் புரிந்தது...

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு பயந்து ரகசியமாக இயங்கிக் கொண்டிருக்கும் "மறுமலர்ச்சிக் கட்சி" யல் மாமா உறுப்பினராக இருக்கிறார். அத்துடன் கட்சியில் சிறுபதவியும் அவருக்கு தரப்பட்டிருக்கிறது. அவரது கட்சித் தோழர்கள் தான் யார் கண்ணிலும் படாமல் இருளில் வந்து மாமாவுடன் அரசியல் நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை நடத்திவிட்டு விடிவதற்குள் வெளியேறிச் சென்று விடுகிறார்கள்.

புதிர் அவிழ்ந்தவுடன் மறுமலர்ச்சிக் கட்சி பற்றி தெரிந்து கொள்வதில் அவன் ஆர்வம் காட்டினான்.

இயக்கம் ஏக அரபுதேசக் கொள்கையைப் பின்பற்றுவதால் அது எல்லா அரபு நாடுகளிலும் கிளைகளைத் தோற்றுவித்துள்ளது. பகிரங்கமாக செயல்பட உரிமை இல்லாததால் அது தலைமறைவாக இயங்கி வருகிறது. அரசாங்கம் தன்னிடம் போலீஸ், இராணுவம் போன்ற வன்முறை எந்திரங்களை வைத்திருப்பதால் ஆட்சியாளர்களைத் தூக்கி எறிய வன்முறை வழியில் துப்பாக்கி ஏந்தினால்தான் முடியும் என்பதில் அது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறது.

மறுமலர்ச்சிக் கட்சியைப் பற்றி இதெல்லாம் தெரிந்து கொண்டவுடன் அதில் சேர்ந்து துப்பாக்கி ஏந்திப் போராடி ஈராக் ஆட்சியாளர்களை ஒழிக்க வேண்டும் என்று சதாம் துடித்தான்.

கட்சியில் சேரும் விருப்பத்தை மாமாவிடம் சொன்னான். மாமா மகிழ்ச்சி அடைந்தார். சதாம தனது 20ஆவது வயதில் மறுமலர்ச்சிக் கட்சியில் சேர்ந்து ரகசிய அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினான்.

மாமா அவனுக்கு நிஜத்துப் பாக்கியால் சுடக் கற்றுக் கொடுத்தார். பத்து வயதிலிருந்தே துப்பாக்கி பிடிக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த சதாம் மிக விரைவிலேயே போராயுதங்களை கையாளப் பழகிவிட்டான். ஈராக் ஆட்சியாளர்களை தன் கைப்பட ஒழித்துக் கட்டும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்... அவர்கள் ஒழிக்கப்படும் நாளும் வந்தது...

அன்று...

கூண்டுக்குள் அடைபட்ட புலி போல் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தான் சதாம். ரத்தம் கொதித்தது அவனுக்கு. "இது பச்சை துரோகம்" என்று உதடுகள் முணுமுணுக்க முஷ்டியை மடக்கி மேஜையில் ஓங்கிக் குத்தினான்.

சதாமின் ஆத்திரத்தில் நியாயம் இருந்தது. எகிப்து, சிரியா ஆகிய இரு நாடுகளும் சமீபத்தில் ஒரே நாடாக இணைந்தபோது அதை வரவேற்றவன் அவன். வெள்ளக்காரர்களின் சதியால் சிதறடிக்கப்பட்டிருக்கும் அரபு நாடுகளெல்லாம் ஒரே தேசமாக இணைய இது ஒரு முன்னோடி என்று அதைக் கொண்டாடியவன் அவன். ஆனால் எகிப்து -சிரியா இணைப்பு இன்னொரு ஏகாதிபத்திய எதிர்ப்பு மையமாக வலுப்பட்டு விடும் என்று அஞ்சிய இங்கிலாந்தும் அமெரிக்காவும் அந்த இணைப்பை உடைத்தெறிய அடாவடித்தனமாய் இராணுவத்தை அனுப்பி வைத்தன. அதைத்தான் சதாமினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல "எகிப்து... சிரியா கூட்டைத் தகர்க்க ஆங்கில- அமெரிக்காப் படைகளுக்குத் துணையாக ஈராக் இராணுவம் அனுப்பி வைக்கப்படும் என்று கூறி ஈராக் அரசு தன் எஜமான விசுவாசத்தைக் காட்டிக்கொள்ள முனைந்தபோது சதாம் கொந்தளித்துவிட்டான்.

"அரபு ஒற்றுமையைக் குலைக்க ஈராக் இராணுவத்தை அனுப்புவதா? இது இனத் துரோகம்" என்று எல்லா ஈராக்கியர்களையும் போல சதாமும் குமுறினான். "இந்நேரம் நான் மட்டும் இராணுவத் தளபதியா இருந்திருந்தா...?" என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான். எந்திரத் துப்பாக்கியால் டட்டட்டட் என்று ஈராக் ஆட்சியாளர்களையெல்லாம் சில விநாடிகளுக்குள் கொன்று குவிக்கும் காட்சி அவன் மனசுக்குள் விரிந்தது. இராணுவத்தில் சேர முடியாமல் போனதை நினைத்து மீண்டும் வருந்தினான். இனி என்ன செய்வதென்று தெரியாமல, என்ன செய்கிறோம் என்று புரியாமல் எந்திரம் போல் வானொலியைத் திருகினான்.

நிலைய வித்வான் வயலின் வாசித்துக்கொண்டிருந்தார். திடீரென்று ஒலிபரப்பு நின்றது. சில நிமிடங்களுக்குப் பின் வானொலி மீண்டும் பேசியது. "இராணுவ உயர் அதிகாரி அப்துல் கலாம் ஆரீஃப் இப்போது நாட்டு மக்களுக்கு ஒரு முக்கிய செய்தி அறிவிப்பார்..."

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து இராணுவ அதிகாரியின் குரல் வானொலியில் கம்பீரமாக ஒலித்தது...

அந்தக் கம்பீரத்தில் ஈராக்கின் புதிய சகாப்தம் தெரிந்தது... (தொடரும்)

# க.பொ.த (உ/த) கணித - விஞ்ஞான ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற க.பொ.த உயர்தரத்தில் கணித, விஞ்ஞானத்துறையில் கல்வி பயிலும மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ். வைததீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி முதல் இது ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 31ஆம திகதியும் இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஓகஸ்ட் 7ஆம் திகதியும் உயிரியல் , இணைந்த கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுககு ஓகஸ்ட் 6ஆம் திகதியும் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் க.பொ.த. உயர்தர வினாத்தாள் தொடர்பாகவும், வினாத்தாள்களுக்கு விடை எழுதும்முறைகள், புள்ளி வழங்கும் முறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது அதில் கலந்துகொள்ளுமாறு தொண்டமனாறு வெளிக்கள நிலைய கற்கை நெறியாளர் திருமதி எம்.இராஜாராம் கேட்டுள்ளார். (ரு-19)









கொரிய நாட்டு இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி யங்ரேகன மறறும் கொரிய நாட்டைச் சேர்ந்த பொறியியல்துறை பேராசிரியர்களையும் யாழ். தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் என். யோகராஜன் அழைத்து வருவதையும், யஙரேகன் உரையாற்றுவதையும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவனுக்கு வதிவிடப் பிரதிநிதி உதவிப் பணத்தை வழங்குவதையும், மேடையில் பிரதநிதிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:ஞா.ஐங்கரன்)

ஆற்றாரும் ஆற்றி அடுபகிடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச்செயின் - குறள்

வலம்புரி

# பேரினவாதத்தை சர்வதேசம் எச்சரிக்கவேண்டும்

இலங்கையின் இனவிவகாரத்தில் சர்வதேசத் தின் பார்வை அண்மைக்காலமாக வலுப்பெற்றுள் ளது.

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தின் உச்சம் காரணமாக இலங்கையின் இனவிவகா ரத்தில் அக்கறைகொள்ளவேண்டிய சூழ்நிலை சர்வதேச சமூகத்திற்கு தவிர்க்கமுடியாததாகி விட்டது.

சர்வதேசத்தின் தலையீடு காரணமாகவே அர சும் விடுதலைப் புலிகளும் இணங்கி கொள்ளக் கூடியதான யுத்தநிறுத்த உடன்பாடும் சாத்திய மாயிற்று. இருந்தும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்வதில் ஜே.வி.பி., ஹெலஉறுமய போன்ற இனவாதக் கட்சிகள் வேண்டுமென்றே பின்னடிக் கின்றமை துரதிஷ்டவசமானதாகும்.

சர்வதேச நாடுகளிடம் பெருந்தொகையான நிதியுதவியைப் பெற்றுவந்த இலங்கை, அவ் உதவிகளை நாட்டின் அபிவிருத்திப் பணிக்கு செலவிட்டு இருக்குமேயானால், தற்போது நாட் டில் தலைவிரித்தாடும் வறுமையும், வேலையின் மையும் இல்லாதுபோயிருக்கும்.

இதனைவிடுத்து தமிழினத்தை அழித்தொழித்து விட்டுப் பின்னர் அபிவிருத்தி பற்றி பார்க்கலாம் என்ற சிந்தனையே சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்தது. ஆயினும் தமிழ்மக்கள் தமது இருப்பை உறுதி செய்துகொள்வதற்காக ஆயுதப் போராட் டத்தை ஆரம்பித்தனர்.

தமது இருப்புக்காக ஆயுதமேந்திப் போராடிய எந்த இனத்துவமும் அதில் தோல்வி அடைந்த தாக வரலாறு இல்லை.

இந்த உண்மையை சிங்களமும், பௌத்த மும்தான் உலகம் என்ற நினைப்பில் இருந்த சிங்கள ஆட்சியாளர்களால் உணர்ந்துகொள்ள முடியாமல்போனது.

ஆயுதப் போராட்டத்தை அகிம்சை வழியில் வெல்லுவதற்குப் பதிலாக தமிழ்மக்களைக் கொன்றொழிக்கவேண்டும். அதில் குறிப்பாக தமிழ் இளைஞர்களை அழிப்பதன் ஊடாக தமி ழினத்தின் வம்சத்தையே இல்லாது செய்துவிட முடியுமென சிங்கள ஆட்சியாளர்கள் திட்டம் [illegible]டியிருந்தனர்.

ஜனநாயக ஆட்சிமூலம் தெரிவுசெய்யப்பட்டவர் களிடம் இத்தகையதொரு திட்டம் இருக்குமா யின் ஜே.வி.பி., ஹெல உறுமய, மற்றும் பௌத்த பிக்குகளிடம் எத்தகைய நிலைப்பாடு இருந்திருக் கும் என்பதை ஊகித்துக்கொள்ளமுடியும்.

இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ்மக்களை பாதுகாக்கத் தவறியதுடன், தனது கட்டுப்பாட் டுக்குள் இருக்கும் படையினர் மூலம் ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் இளைஞர்களை கொலைசெய்தது.

இந்த மோசமான நிலை தமிழர் தாயகம் எங் கும் வியாபித்துக்கொள்ள அதன் மறுபுறமாக தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டமும் உச் சம் அடைந்தது.

சிங்கள பேரினவாத அரசுகள் தமிழ்மக்களை கொன்றொழித்து அவர்களின் உரிமைகளையும், உடைமைகளையும் கபளீகரம் செய்தபோது ஏன்? எதற்கு? எனக் கேள்வி எழுப்பாமல் சர்வ தேச நாடுகள் மௌனம் சாதித்தன.

தாம் வழங்கிய நிதியுதவியைக்கூட தமிழ்மக் களின் அழிப்புக்கு இலங்கை அரசு பயன்படுத்து கின்றதென்ற உண்மையைத் தெரிந்திருந்தும் உலகநாடுகள் மௌனம் சாதித்தமை அந்நாடு களின் நடுநிலையற்ற தன்மையின் வெளிப்பாடா கவே இருந்தது.

எனினும் தமிழ்மக்களின் விடுதலைப் போராட் டம் அதிர்ச்சியைக் கொடுத்தபோது விழிப்படைந்து கொண்ட உலகநாடுகள் இப்போது இனவிவ காரத்தில் அக்கறையோடு இருப்பது தெரிகின் றது.

அவர்களின் அக்கறை அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமாயின் முதலில் பேரினவாதி களை எச்சரிக்கை செய்வது கட்டாயமானதா கும்.

# படையினரை உசார் நிலையில் இருக்க பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடமையாற் றுகின்ற இராணுவத்தினர் சவப்பெட்டிகளில் வீடு திரும்பு வதை தமது அரசு அனுமதிக்காது எனப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு அவர் உரையாற்றுகையில்,

அமைதி முயற்சிகளை முன்னெடுக்கவே தமது அரசு நட வடிக்கைகளை மேற்கொள்கிறது. இருந்தபோதிலும் சவப் பெட்டிகளில் நமது சிப்பாய்கள் வீடு திரும்புவதை அனு மதிகக முடியாது. அனைத்துத் தரப்புப் பகுதியினரையும் படை யினரையும் உசார் நிலையில் இருக்க உத்தரவிடப்பட்டுள் ளது. திருகோணமலை நிகழ்வுகளுக்கு அரசு பொறுப்பல்ல. சில தேசத்துரோக சக்திகளே பொறுப்பு எனவும் அவர் மேலும தெரிவித்துள்ளார். (அ-7)

# அநீதியை எதிர்நோக்கிய பிள்ளைகளுக்கு அனுமதி வழங்க துரித நடவடிக்கை

(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு அனுமதி கோரி விண்ணப்பித்த போது பலவேறு அநீதிகளை எதிர்நோக்கி பாடசாலை அனுமதியை இழந்த 150 பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி விஷேட விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, முதலாம் தரத்திற்கான அனுமதிகளின் போது அநீதிகளை எதிர்நோக்கிய மேலும் பல பிள்ளைகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக ஆணைக் குழுத் தலைவர் ஏ.விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த விசாரணைகளின் போது கல்வி அமைச் சின் அதிகாரிகளிடமிருந்து தடைகள் ஏற்படுவதாக விக்கிரம சிங்க குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதிக்கும் போது பலவேறு முறைகேடு களில் ஈடுபட்ட 200 அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் 8 பாடசாலை அதிபர்களுக்கு எதிராகவே விசா ரணைகளை மேற்கொள்ள முடிந்ததாக விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (க-2)

# தேர்த் திருவிழா

(பருத்தித்துறை)

இலங்கையின் இரண்டாவது கதிர்காமமெனப் பக்த அடி யார்களால் போற்றப்படும் தென்புலோலி தான்தோன்றி உபய கதிர்காமக் கந்தனின் தேர்த்திருவிழா இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

நாளை தீர்த்தத்திருவிழா நடைபெறவுள்ளது. (க-52)

# எங்களுடைய பலத்தின் மூலமே உரிமைகளை வென்றெடுக்க முடியும்

(கொழும்பு)

எங்களுடைய பலத்தின் மூலமே எங்களுடைய உரிமை களை வென்றெடுக்க முடியும் என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டு வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தமிழீழத் தேசிய தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ் வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு இருந்த நிலைமை படிப படியாக மாறிவருகின்றது.

எமது மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் இலங்கை பேரினவாதத்தின் நிலைமையை. ஆகவே இந்த அரசாங்கத் திடம் கையேந்தி நிற்கவோ அல்லது இந்த சமாதான நிலைமை போதும். இந்த சாமாதான நிலைமையில் இருந்து வாழ்ந்து விடலாம் என்ற நிலைமைக்கு அப்பால் பலர் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நிச்சயமாக எங்களு டைய உரிமைகளை எங்களுடைய பலத்தின் மூலமே வென் றெடுக்க முடியும் என்றார். (க-4)

# மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க 14நாட்கள் கால அவகாசம்

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு தேசியப் பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்வதற்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்படாத மாணவர்களுக்கான மேன்முறையீடுகளைச் சமர்ப்பிப்பதற்கு கல்வியமைச்சு 14 நாட்கள் கால அவகாசம் வழங்கியுள் ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர்ப்பட்டியல் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின அறிவித்தல் பலகையில் காட்சிக்கு வைக்கப்பட்ட நாள் முதல் 14 நாட்களுக்குள் மேன் முறையீடுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேன்முறையீடுகளை மேன்முறையீட்டு ஆணையாளர், கலவியமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் வருடத்துக்கு தேசிய பாடசாலைகளில் முத லாம் தரத்தில் சேருவதற்கு விண்ணப்பித்து அவற்றில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்களைக் கல்விய மைச்சு அதன் இணையத்தளத்தின் ஊடாக வெளியிட்டு வரு கின்றது.

அத்துடன், அனைத்துப் பெயர்ப்பட்டியல்களையும் ஒவ் வொரு பாடசாலைக்கும் அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.பட்டியல்கள் கிடைக்கப்பெற்றதும் அவற் றைப் பாடசாலைகளின் அறிவித்தல் பலகைகளில் உடனடி யாகக் காட்சிக்கு வைக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட் டுள்ளது. (க-2)

# முத்தலிப் கொலையுடன் தொடர்புடைய இருவரை கைது செய்ய கிழக்குக்கு விசேட குழு

(கொழும்பு)

இராணுவப்புலனாய்வு அதிகாரி மேஜர் என்.முத்தலிப்பை கொலை செய்த இருவரையும் பிடிப்பதற்காக விசேட பொலிஸ குழுவொன்று கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது இக் கொலை தொடர்பான விசாரணைகள் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளதாகவும், கொலையாளிகள் மிக விரை வில் கைதுசெய்யப்பட்டு விடுவார்களெனவும் குற்றப் புலனாய் வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தக் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட புலிகளின உறுப்பினரான ராஜன் என்பவருடன் தொடர்பு கொண்டிருந்த பலர் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும் கூறினர்.

நாரஹேன்பிட்டியில் மோட்டார் சைக்கிளொன்றில் வந்து முத்தலிபபை கொன்றுவிட்டு தப்பிச் சென்ற இருவரையும் கணடுபிடித்து கைது செய்வதற்காக கிழக்கிற்கு விசேட பொலிஸ் குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேநேரம் இக்கொலை தொடர்பாக கடந்த ஞாயிற்றுக் கிழமை மட்டக்குளியப் பகுதியைச் சேர்ந்த பண்டார கங்கன மலகே தனபால அல்லது சரத் என்பவர் கிருள்ள பாலத்திற்கு அருகில வெலிக்கந்த வீதியில் ரந்த பொலவத்தைப் பகுதியில வைதது கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முத்தலிப் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட பத் திரிகையாளர் சஞ்சீவவுடன் இவர் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது. தகவலொன்றின பேரிலேயே மிரிஹான பொலிஸார் இவரைக் கைது செய்ததாக வும் தெரிவிக்கப்படுகிறது. (க-4)

# காரைநகர் இளைஞன் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள புளொட் அலுவல கத்திற்கு அருகாமையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காரைநகர் வாசி ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுப்பிரமணியம் செந்தில்நாதன் (வயது-29) என்ற நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் படடுள்ளார். (அ-4)



சாயி அருளமுதம்

சென்ற பிறவிகளில் இயற்றிய புண்ணிய கரு மங்களுக்கான பிரதிபலன்களை இப்பொழுது எடுக்கலாம். ஆனால் இருப்பில் இல்லாதவிடத்து காசோலைகள் செல்லுபடியாகாது போய்விடும். அத்துடன் கணக்கு வைத்திருப்பவர் மட்டுமே கொடுக்க, வாங்க முடியும். ஒவ்வொருவரும் தத்தமது சொந்தப் பெயர்களில் ஒவ்வொரு தனிப பட்ட கணக்கு வைத்திருக்க வேண்டும். ஒரு சகோ தரன் இன்னொரு சகோதரனின் கணக்கில் இருந்து எடுக்க முடியாது. கணவனின் கணக்கில இருந்து மனைவியும் பெற்றுக்கொள்ள முடியாது.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# நேரடிப்பேச்சில்....

நேர்காணல் பின்வருமாறு

இன்றைய சந்திப்பு தொடர்பாக?

பதில் :- இன்றைய சந்திப்பு வழமையான சந்திப்பாக அமைந்தது. தற்போது ஏற்பட்டுவரும் நெருக்கடி நிலைபற்றியும் தற்போது ஏற்பட்டுவரும் குழப்பகரமான நிலைபற்றியும் விவாதிக்கும் சந்திப்பாக அமைந்தது. எமது தலைமைப்பீடத்தின் நிலைபாடுகளை உறுதியாகவும் ஆணித்தரமாகவும் இச்சந்திப்பில் வெளிப்படுத்தியுள்ளோம்.

கேள்வி :- தற்போது நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டு உதவி வழங்கும் நாடுகளும் அமெரிக்க தூதரகமும் வன்முறைகளை நிறுத்தி சமாதானத்ததை நோக்கிய பாதையில் செல்லுமாறு வலியுறுத்தியுள்ளது. அரசையும் புலிகளையும் இந்த நிலைமையில் இன்றைய சந்திப்பு முக்கியமாக எமக்கு படுகின்றது முக்கிய முடிவுகள் எதுவும் இச்சந்திப்பில் எடுக்கப்பட்டதா?

பதில் :-சர்வதேச சமூகத்தின் கரிசினைகளை மதிக்கின்றோம். புரிந்துகொள்ளுகின்றோம். அதேபோல் அனுசரணையாளர்கள் என்றவகையில் நோர்வே தரப்பினுடைய முயற்சியையும் ஈடுபாட்டையும் மதிக்கின்றோம். ஆனால் ஒருதரப்பு என்றவகையில் இலங்கையரசும் படைத்தரப்பும் யுத்தநிறுத்த உடன்பாட்டின் படி சீரானமுறையில் நடைமுறைகளை கடைப்பிடிக்காததினால் சர்வதேச சமூகத்தினரால் எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றியளிக்கும் என்று எமக்குத் தெரியவில்லை. இன்றைய சந்திப்பில் கூட அதனை வலியுறுத்தியிருக்கின்றோம். யுத்தநிறுத்த உடன்படிக்கையிலுள்ள நடைமுறைகளிலுள்ள வடக்கு கிழக்கு பகுதியிலுள்ள ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு எமதுதாயகப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்தநடைமுறையை அரசு கடைப்பிடிக்காமல் விட்டால் எமது தாயகப் பிரதேசத்தில் நடக்கும் கொலைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்க முடியாது. ஆகவே இந்தக் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். எமது போராளிகள் பாதுகாப்பாக நடமாடவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

கேள்வி :- அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் உள்ள தேக்கநிலையைப் போக்குவதற்கு நோர்வே அரசும் கொடையாளி நாடுகளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக ஏதாவது சிறிய அளவிலான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று நாம் நம்பலாமா?

பதில்: தீர்வு கிடைக்காத நிலையில் இராணுவம் தனது செயல்களை செய்தவண்ணம் உள்ளது.

இதற்கு உடனடியாக முடிவு கட்டப்படவேண்டும்.அரசு ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்காத நிலையில் நோர்வே தரப்பு எம்மிடம் வந்து கலந்துரையாடியுள்ளார்கள்.

கேள்வி:-நோர்வே தரப்பு தேக்க நிலையைப் போக்க ஏதாவது யோசனைகளை முன்வைத்தார்களா?

பதில்:-நோர்வே தரப்பின் யோசனையாக இருதரப்பும் சந்தித்து பேசவேண்டும் என்பதாக அமைந்திருந்தது. அதற்குரிய சூழலை சிறிலங்கா படைத்தரப்பு குழப்பிய நிலையில் நாம் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் உள்ளோம் என்பதை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம். போராளிகளை படுகொலை செய்துவிட்டு அலுவலகங்களை தாக்கிவிட்டு போராளிகளுக்கு அச்சுறுத்தல்களை விடுத்துவிட்டு போராளிகளை சந்தித்து கலந்துரையாட வைக்க முனைவதென்பது சாத்தியமற்ற விடயம்.

கேள்வி:-நேரடிச் சந்திப்பு சாத்தியமில்லை என்ற செய்தியைதான் அரசுக்கு அனுப்பியுள்ளீர்களா?

பதில்:-நேரடிச் சந்திப்பு என்பது நல்லதொரு சூழலை கட்டியெழுப்பும் நிலையில்தான் சாத்தியப்படும். நல்லெண்ணத்தை கட்டியெழுப்பக் கூடிய சூழலை அரசும் படைத்தரப்பும் உடனடியாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதைதான் சுட்டிக்காட்டியுள்ளோம்.

கேள்வி:-போராளிகளின் போக்குவரத்து, ஆயுதக் குழுக்களின் ஆயுதக்களைவு பற்றிய புதிய யோசனைகளை அரசு நோர்வே தரப்பூடாக தங்களுக்கு அனுப்பியுள்ளதா?

பதில்:-இன்று அரசு யோசனைகள் எதுவும் அனுப்பவில்லை. எங்களுடைய உறுதியான நிலைப்பாட்டை அறிந்து .செல்கின்ற நோக்கோடுதான் இன்று எம்மிடம் வருகைதந்தது.எமது தலைமைப்பீடத்தின் உறுதியான முடிவை நோர்வே தரப்புக்கு முன்வைத்துள்ளோம்.

கேள்வி:-நல்லெண்ண சமிக்கைகள் ஏற்படும் என்று எதிர்பார்கிறீர்களா?

பதில்:-அது தொடர்பாக இப்போது கூறமுடியாது. அரசையும் படைத்தரப்பையும் நம்பி எந்த கருத்துக்களையும் கூற முடியாத நிலையில் உள்ளோம். (ச-8)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன் கண்காணிப்புக்குழுத் தலைவர் சந்திப்பு

(கிளிநொச்சி)

நோர்வேயின் இலங்கைக்கான பிரதித்தூதுவர் ஓட்வர் லக்ரட் மற்றும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ருப் ஹொக்லண்டன் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

முன்னதாக உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த அவர்களை சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்று அழைத்துச்சென்றார்.

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

## திருமலை புத்தர்சிலை விவகாரம் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

### இரா.சம்பந்தன் சபையில் கேள்வி

(கிளிநொச்சி)

திருகோணமலையில் கடந்த மே 16 ஆம் திகதியன்று திருகோணமலை நகரசபை அனுமதியின்றி சட்டவிரோதமாக இறைச்சி, மீன் சந்தைகள் மற்றும் மதுசாலைக்கு அருகில் புத்தர்சிலை வைக்கப்பட்டது.

புத்தர்சிலை வைக்கப்பட்ட இடமே அது வழிபாட்டுக்காக அல்ல என்பதும், இருஇன மோதல்களை உருவாக்கவே வைக்கப்பட்டுள்ள தென்பதையும் வெளிப்படுத்துகிறது.

திருகோணமலையின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்கவும், பொதுக்கட்டமைப்பை செயல்படுத்துகின்ற நடவடிக்கைகளையும் முடக்குகின்ற நோக்கத்திலுமே இந்தப் புத்தர்சிலை திணிக்கப்பட்டது.

இதைக் கண்டித்து போராட்டங்களும், முழு கடையடைப்புக்ளும் திருகோணமலையில் நடத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக சில வன்முறை நிகழ்வுகளும் நடந்துள்ளன.

இத்திருமலை புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக அரசு என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப்போகிறது? திருகோணமலையில் அமைதி திரும்ப என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்போகிறீர்கள். பாரபட்சமாக திணிக்கப்படும் சட்ட ஒழுங்கு மேலதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கும், இராணுவத்தின் ஒடுக்குமுறைகளிலிருந்தும் தமிழ் மக்கள் மீள்வதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறீர்கள் என்று கேள்வி எழுப்பினார் சம்பந்தன்.

சம்பந்தன் பேசிக்கொண்டிருக்கையில் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் அத்துரலிய ரத்தின தேரர் கூச்சல் எழுப்பிக்கொண்டிருந்தார். (ச-8)

## வலுவூட்டல் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும், சி.ஏச்.ஏ.நிறுவனமும் இணைந்து நடாத்தும் ‘சமாதானமும் அபிவிருத்தியும்’ என்ற விடயம் தொடர்பாக கிராமசேவையாளர்களுக்கான வலுவூட்டல் பயிற்சிநெறி இன்றும் நாளையும் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9.30 தொடக்கம் பிற்பகல் 4.30மணி வரை நடைபெறவுள்ளது. (ச)

## கல்வி மாநாட்டின் தொடக்க விழா இன்று

கல்வி ஒருபன்முகப்பார்வை என்ற தலைப்பில் மூன்று நாட்கள் நடைபெறவுள்ள கல்வி மாநாட்டின் தொடக்கவிழா இன்று காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வீரமணி ஐயர் அரங்கில் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ்.பல்கலைகழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம், கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், யாழ்.கல்விப்பேரவைத் தலைவர் செல்வி திலகவதி பெரியதம்பி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார். (ச)


## முதல் நன்மை வாழ்த்து

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த

கீதபொன்கலன் – ராஜகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அமலன் ஜீவானந்தா

மை.ஆஞ்சலோ – ஸ்ரெலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் செபஸ்ரியன்



ஆகியோர் தமது முதல் நன்மையினை தத்தமது வீடுகளில் இன்று வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றனர்.

இவர்களை அன்பு அம்மம்மா, அப்பம்மா, அப்பா, அம்மா, சித்தப்பாமார் சித்திமார், மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், நோர்வேயில் உள்ள குட்டி அங்கிள், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் இறைவனின் துணைகொண்டு பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும், சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

24/1 பால உடையார் வீதி
குருநகர், யாழ்ப்பாணம்.

க.கீதபொன்கலன் குடும்பம்

(C/1484)


## மரண அறிவித்தல்



### இரத்தினம் சிவராசா

பிரபல வர்த்தகர்-ஆனைக்கோட்டை

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் இரத்தினம் சிவராசா நேற்று (20.07.2005) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் சின்னத்தங்கச்சியின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நாகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், பாலாம்பிகையின் அன்புக் கணவரும், தர்சிகா, சாமினி (கொக்குவில் இந்துக்கல்லூரி), சிவானுஜன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் குருநாதன், நாகராஜா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலலட்சுமி, பாலச்சந்திரன், பாலரஞ்சினி, பாலகுமாரி, பாலசரஸ்வதி, பாலகிருஷ்ணன், பாலகௌரி, பாலதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.07.2005) காலை 11.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரையான்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

தகவல்.
பாலாம்பிகை சிவராஜா
மனைவி

(9832)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.